www.padippakam.com

மே '97
ம.க.இ.க. மாத இதழ்
ரூ.4.00

# புதிய கலாச்சாரம்



குமாரி சென்னை,
உதவும் கரங்களின்
கருணாலயத்தில்
வாழ்நாளை
இழந்து கொண்டிருக்கும்
எய்ட்ஸ் நோயாளி.

இவரைப் போன்றவர்களின்
அவலங்களைக் காட்டி
எய்ட்ஸ் வருமுன் காக்க
மக்களை எச்சரிக்கிறது
இந்திய அரசு.

## விபச்சாரத்தின் தரகன் எய்ட்ஸின் மருத்துவனா?

படிப்பகம்

www.padippakam.com

# காந்திபுரம் வருவாளா? குமுந்தலாயி அம்மன்?

பல கிராமங்களில் கோயிலுக்குள் தாழ்த்தப்பட்ட மக்கள் நுழைய முடியாது. நகரங்களிலோ தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் வீதிகளில் சாமி நுழையாது.

ஒவ்வொரு மாசி மாதமும் திருச்சி நகரில் வெகுவிமரிசையாக நடக்கும் உறையூர் குமுந்தலாயி அம்மன் கோயில் திருவிழாவிலும் இதுதான் நடைமுறை. மூன்று நாள் திருவிழாவில் முதல் நாள் சுத்த பூசை, இரண்டாவது நாள் குட்டி குடித்தல், மூன்றாவது நாள் மஞ்சள் நீராட்டு.

செட்டியார் முதல் வன்னியர் வரையிலான ஏழு சாதிகளைச் சேர்ந்த ஏழுபேர் கோயிலின் பட்டறைக்காரர்கள். 'மேல்' சாதிக்காரர்களின் தெருக்களுக்கு ஒவ்வொரு நாளும் சென்று வீடு வீடாகப் பூசை வாங்கிக் கொள்ளும் அம்மனின் தேர், தாழ்த்தப்பட்டோர் தெருவில் மட்டும் பூசை வாங்கிக் கொள்ள நுழையாது.

கோயிலுக்கும் உறையூர்ப் பகுதிக்கும் இடையில்தான் இருக்கிறது காந்திபுரம் என்ற தாழ்த்தப்பட்டோர் தெரு. முதல்நாள் திருவிழா துவங்கும்போது அந்தத் தெருவைத் தாண்டி உறையூருக்குள் நுழையும் தேர் மூன்று நாள் திருவிழாவும் முடிந்து நான்காவது நாள் கோயிலுக்குத் திரும்பும்போதுதான் வேறு வழியின்றி காந்திபுரத்தில் நுழையும்.

அப்போது தெருவுக்கு வெளியிலேயே தேரை நிறுத்தி காந்திபுரத்துக்காரர்களை அங்கேவந்து சாமி கும்பிட்டுக் கொள்ளச் சொல்லுவார்கள். பிறகு சக்கரம் தெருவில் பாவாமல் பறந்து போய் கோயிலில் நுழைந்து விடுவாள் அம்மன்.

இளைஞர்கள் சிலரின் முயற்சியின் விளைவாகக் கடந்த சில ஆண்டுகளாகத் தெருவுக்கு வெளியே நின்ற சாமி தெருவுக்குள் சில நிமிடங்கள் வேண்டாவெறுப்பாக நின்று பூசை வாங்கிக் கொண்டது.

இந்த ஆண்டு மஞ்சள் நீராட்டு முடிந்து திருவிழாவே முடியவிருக்கும் நேரத்தில் அம்மனுக்கு வந்தது சோதனை! "எங்கள் தெருவிற்கு மட்டும் சாமி வராதா?" என்று காந்திபுரத்து இளைஞர் ஒருவர் செட்டித் தெருக்காரனைக் கேட்க "பறத் தெருவுக்கெல்லாம் சாமி வராது" என்று அவன் திமிர்த்தனமாய்ப் பதில் சொல்லி கன்னத்தில் ஒன்று வாங்கிக் கொண்டான்.

இந்தச் சம்பவம் பற்றிக் கேள்விப்பட்டவுடன் இதை இரண்டிலொன்று பார்த்துவிடுவதென்று முடிவு செய்தனர் காந்திபுரம் இளைஞர்கள். முடிவு செய்த நேரமோ மார்ச் - 7 வெள்ளிக்கிழமை இரவு. அன்றுடன் திருவிழா முடிகிறது.

மறுநாள் காலை வழக்கம்போல தேர் கோயிலுக்குத் திரும்பும்போது காந்திபுரத்தில் மறித்துவிடுவது என முடிவு செய்து மறுநாள் அதிகாலை நகரெங்கும் மறியல் குறித்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. சனிக்கிழமை காலை முதல் ஒலிபெருக்கியில் ம.க.இ.க. - வின் அசுர கானம் ஒலிக்கத் தொடங்கியது.

பட்டறைக் காரர்கள் முன்னால் வர, போலீசு டி.எஸ்.பி., ஆர்.டி.ஓ., தாசில்தார் போன்ற அதிகாரிகள் உடன் வர, அவர்களைச் சுற்றி அதிரடிப் போலீசாரின் படையும், காவல் வாகனங்களும் வர, தாரை தப்பட்டையுடன் வந்த அம்மனின் தேர் மறிக்கப்பட்டது. சாமி கும்பிடத் தயாராக வந்த மக்கள் தான் சாமியை மறித்தனர்.

உடனே பதட்டநிலை; பிறகு இறுக்கமான அமைதி. அசுரகானம் மட்டும் ஒலித்துக் கொண்டிருந்தது. பிரச்சினையை உடனே பேசித் தீர்க்கலாமென்றும் கலவரத்திற்கு வழி வகுத்துவிட வேண்டாமென்றும் அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர்.

"பட்டறைக் காரர்களில் ஒருவராக எங்கள் பிரதிநிதியும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்; 3 நாட்களும் தேர் காந்திபுரத்திற்கும் வர வேண்டும். பிற சாதியினர்க்கு இருக்கும் அனைத்து உரிமைகளும் எங்களுக்கும் தரப்பட வேண்டும். இவற்றை ஏற்றுக்கொள்ளா விட்டால் அடுத்த ஆண்டு முதல் திருவிழாத் தேர் கோயிலிலிருந்து கிளம்பி இந்தத் தெருவைத் தாண்டிச் செல்ல விடமாட்டோம். இந்த கோரிக்கைகளை அதிகாரிகள் ஏற்பதாலும், பிற பட்டறைக் காரர்களை பேசிச் சம்மதிக்கச் செய்வதாக ஒத்துக் கொண்டதாலும், ஊர்ப் பெரியவர்கள் இந்த அடிப்படையில் தேரை தற்போது போக அனுமதிக்கலாம் என்று கூறுவதாலும் தேரை போக அனுமதிக்கிறோம்.

அதிகாரிகள் தங்கள் நாணயத்தைக் காப்பாற்ற வேண்டும்; இல்லையேல் விளைவுகள் அதற்கேற்ப அமையும்" — என்று ஒலிபெருக்கியில் ம.க.இ.க. தோழர் ஒருவர் அறிவிப்பு செய்தார். மக்கள் கரவொலி எழுப்பினர்.

"அரிசனன்னு பேரு வைக்க யாரடா நாயே" என்ற பாடல் ஒலிபெருக்கியில் ஒலிக்கத் தொடங்கியவுடன் அம்மன் தேர் ஓசைப்படாமல் அங்கிருந்து நழுவியது.

கோயிலுக்குத் தேர் போய்ச் சேர்ந்த சிறிது நேரத்திலேயே பேச்சு வார்த்தை தொடங்கியது. காந்திபுரம் மக்கள் நூற்றுக்கணக்கில் திரண்டு நிற்க, அவர்கள் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டனர்.

"தாயா புள்ளயா பழகிக் கிட்டிருந்தோங்க. யாரோ வந்து தூண்டி விடுறாங்க. அது மட்டும் நல்லா தெரியுது" என்று கூறி பட்டறைக்காரர்கள் சார்பில் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து வைத்தார் எண்ணெய் மில் செட்டியார்.

(தொடர்ச்சி 23-ஆம் பக்கம்)

**சாதியா, சாமியா என்ற கேள்வி வரும்போதெல்லாம் 'உயர்சாதி' ஆதிக்கவாதிகள் சாமியைத்தான் கை கழுவியிருக்கிறார்கள். தன்மானமா, கடவுள் நம்பிக்கையா என்ற கேள்விக்கு தன்மானம்தான் என்று அழுத்தமாக பதிலளித்திருக்கிறார்கள் தாழ்த்தப்பட்ட மக்கள். கையில் தேங்காய், பழம், குடத்துடன் சாமி கும்பிட வந்த மக்கள்தான் தேரை மறித்தார்கள். ஒரு கை கூட கும்பிடுவதற்கு உயரவில்லை; ஒரு தேங்காய் கூட உடையவில்லை.**


பதிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• போர்: 14
• குரல்: 9-12
• பிப் - மே '97

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 4.00
ஆண்டு சந்தா: ரூ. 48.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்

இரா. சீனிவாசன்,
3, நான்காவது தெரு,
செகந்நாதபுரம்,
சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.

# ரௌடி அரசியலுக்கு பதிலடி என்ன?

மதுரை மாநகராட்சியின் வில்லாபுரம் வட்ட உறுப்பினரும் 'மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்' கட்சிக்காரருமான லீலாவதி என்பவர் சமீபத்தில் மிகவும் கொடூரமான முறையிலும், கோழைத்தனமாகவும் வெட்டிப்படுகொலை செய்யப்பட்டுள்ளார். வில்லாபுரம் வட்ட தி.மு.க. செயலாளர் முத்துராமலிங்கம், அவரது தம்பி கருமலையான் என்கிற அண்ணாதுரை, அவரது மைத்துனன் முருகன் மற்றும் சில கிரிமினல் ரௌடிகள் படுபயங்கரமான இந்தச் செயலைப் புரிந்துள்ளனர். மாநகராட்சி லாரிகளில் வரும் குடி நீரை பிடிப்பவர்களிடம் வசூல்செய்வது, அரசு நியாய விலைக் கடைகளைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து முறைகேடுகள் புரிவது, வியாபாரிகள் - சிறுதொழில் முனைவோரிடம் மாமூல் வசூலிப்பது, கள்ளச் சாராயம் விற்பது, புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து விற்பது, வீடு காலி செய்வது - லேவாதேவி வட்டி வசூலிப்பது ஆகியவற்றில் அடியாட்களாக செயல்படுவது - இப்படிப் பல கிரிமினல் குற்றங்களில் ஈடுபட்டு வந்திருக்கிறது, அந்தக் கொலைகாரக் கும்பல். அது தனது அதிகாரத்தையும், ஆதிக்கத்தையும், கொள்ளையையும் பெருக்கிக் கொள்ளும் முயற்சியாக அண்ணாதுரையின் மனைவி வள்ளியை மதுரை மாநகராட்சியின் வில்லாபுரம் வட்ட உறுப்பினர் தேர்தலில் ஆளும் தி.மு.க. சார்பாகப் போட்டியிட வைத்தது. ஆனால் அவரை எதிர்த்துப் போட்டியிட்டு அந்த முயற்சியை முறியடித்ததோடு, அந்த ரௌடிக் கும்பலின் கிரிமினல் குற்றங்களுக்கு எதிராகப் பல புகார்கள் கொடுத்து தடுத்தும் வந்திருக்கிறார், கொலையுண்ட லீலாவதி.

மதுரை வில்லாபுரத்தில் நடந்துவரும் சமூக விரோதக் கிரிமனல் குற்றங்களும், கொலையும் விதிவிலக்கானவை அல்ல; எங்கும் பரவி நிலைகொண்டுவிட்ட ''கிரிமினல்மயமான - பிழைப்புவாதப் பொறுக்கி அரசியல் பண்பாடாக'வே உள்ளது; கடந்த சில ஆண்டுகளின் நாட்டு நடப்புகளைக் கவனித்துவரும் அனைவரும் இந்த உண்மையை ஒப்புக் கொள்வர். அரசியல்வாதிகள் - அதிகாரிகள் - கிரிமினல்களின் கூட்டு பற்றிய அதிர்ச்சிதரும் பல உண்மைகளைக் கொண்ட ''வோரா கமிட்டியின்'' அறிக்கை ஒரு சர்வகட்சி உடன்பாடுபோல கிடப்பில்போட்டு அமுக்கப்பட்டுவிட்டது. அறிக்கையை அமுக்கிவிட்டு, அரசியல் கிரிமினல்களையும், கிரிமினல் அரசியல்வாதிகளையும் அனைத்துக் கட்சிகளுமே செல்லப் பிராணிகளாக வளர்க்கின்றன.

தமிழ்நாட்டிலேயே சென்னை, மதுரை, நெல்லை போன்ற மாநகராட்சி, கடலூர், திண்டுக்கல் போன்ற நகராட்சிகளிலும் மட்டுமல்ல, பேரூர் - சிற்றூர்களில் எல்லாம் இந்தப்போக்கு நீக்கமற நிறைந்துவிட்டது. சமீபத்தில் காஞ்சிபுரம் அருகே உள்ள சிறுவள்ளூரில் கள்ளச்சாராய விற்பனைக்கு எதிராகக் கிராமப் பெண்கள் போராடினர். அதற்குத் தலைமையேற்ற பெண்மணியை நிர்வாணப்படுத்தி, தாக்கியுள்ளார் கள்ளச்சாராய வியாபாரியின் மருமகனான கிராமப் பஞ்சாயத்துத் தலைவர். இப்படி அவர்களது சமூகவிரோத கிரிமினல் குற்றங்களுக்கு எதிரான மக்கள்மீது மட்டுமல்ல, அவற்றுக்குப் போட்டியாக உள்ள குற்றக் கும்பல்களையும் ஒழித்துக்கட்டும் கொலைவெறித் தாக்குதல்களும் வழக்கமாகிவிட்டன. நீதிமன்ற வளாகங்கள், சிறைச்சாலைக்குள்ளே புகுந்து நாட்டு வெடிகுண்டு, வெட்டரிவாளை வீசி எதிரிகளைக் கொன்றொழிப்பது தமிழ்நாட்டில் பரவலாகிவிட்டது. திராவிடம், தேசியம் மட்டுமல்ல, இடதுசாரி முன்னணி உட்பட எல்லா ஓட்டுக் கட்சிளிலும் இத்தகையவர்கள் நிரம்பி வழகின்றனர்.

''ஆளும் கட்சியினரேயானாலும் எவ்வித தயவுதாட்சண்யம், பாரபட்சமின்றி குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள்'' என்கிறார், முதல்வர் கருணாநிதி. ஆனால் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்து, சில தகவல்கள் வெளிவந்த பிறகே ''நடவடிக்கை'' என அறிவிக்கப்படுகிறது. இவை நடக்காமல் இருப்பதற்கு என்ன வழி? ஜெயலலிதா உட்பட முன்னாள் அமைச்சர்கள், சில அதிகாரிகள் மீது மட்டும் நடவடிக்கை; ஆசைத்தம்பி, கபிலன் போன்ற சில கிரிமினல்களை ஒழிப்பது - போன்ற ஒருசில, மேல்மட்ட நடவடிக்கைகள் சிற்றூர், பேரூர்வரை பரவியுள்ள சமூகவிரோத கிரிமினல்களை அடியோடு ஒழிக்கப் போதுமானவையா? நாம் எழுப்பிவரும் இந்தக் கேள்விகளுக்கு இதுவரை பொறுப்பானவர்களிடம் இருந்து பதிலில்லை.

சமூகவிரோத அரசியல் கிரிமினல்களைக் களையெடுக்கும்முகமாக ''திடீர் பணக்கார அரசியல் ரௌடிகளுக்கு எதிரான இயக்கத்தை'' மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி ஆகியவை - பெரிய அளவுக்கு இல்லாவிட்டாலும் முடிந்த அளவுக்கு - கடந்த ஓராண்டுக்கு மேலாக நடத்தி வருகிறது. இதனால் பல இடங்களில் எதிரிகளின் தாக்குதலை எதிர்கொண்டும், சாத்தியமான இடங்களில் முறியடித்தும் வருகின்றன. வேறு எந்த அமைப்பும் இதன் அவசியத்தை உணராத அதேசமயம், போலிப் புரட்சியாளர்களும், குடவாசல் தங்கையனையும், வில்லாபுரம் லீலாவதியையும் பலிகொடுத்த போலி மார்க்சிஸ்டுகளும் இந்த இயக்கம் வெறுமனே படபரப்பை ஏற்படுத்துவது; ரௌடியிசத்தின் சமூகக் காரணத்தைக் காணத் தவறுவது என்று இழித்துப் பேசி எழுதினர். நாடாளுமன்ற சமரச சட்டவாதத்திலும், தொழிற்சங்கப் பிழைப்புவாதத்திலும் மூழ்கிப்போன இவர்கள் இந்த இயக்கத்தின் அவசியத்தை மறுப்பதில் வியப்பில்லை. ஆனால் திடீர் பணக்கார அரசியல் ரௌடிகளைப் பிடித்து மொட்டையடித்துக் கழுதைமீது ஊர்வலம் நடத்துவது முதல் நேரடி எதிர்த் தாக்குதல்வரை பகிரங்கமான நடவடிக்கைகள்தாம் அவர்களிடையே பயபீதியைப் பரப்பி அவர்களின் ஆதிக்கத்தை எதிர்க்கும் துணிவையும் மக்களிடையே ஏற்படுத்தும்.

படிப்பகம்

www.padippakam.com



விற்பனையில் திராவிட இயக்கம்:

# இருவரின் வெற்றி! மணிரத்தினத்தின் தோல்வி!

இருவர் திரைப்படம் திராவிட இயக்க வரலாற்றைக் கொச்சைப்படுத்தி விட்டதென்று பல பத்திரிகைகள் எழுதியபோதும் தொண்டர்கள் யாரும் எங்கேயும் கிளர்ந்தெழவில்லை.

வரலாறு தொடர்பான திரைப்படத்தைப் பார்க்கும் ரசிகனுக்கு அந்த வரலாறு குறித்த அறிவு இருக்க வேண்டும். திராவிட இயக்கம் பற்றிய ரசிகனின் வரலாற்றறிவுக்கும், மணிரத்தினம் கூறும் வரலாறுக்கும் பெரிய முரண்பாடு எதுவும் இல்லை என்பதே இந்த அமைதிக்குக் காரணம்; ஒரு விதத்தில் தோல்விக்கும் அதுவே காரணம்.

"அது ஜானகி, இது வீரப்பன், அவர் நெடுஞ்செழியன்" என்று இந்த 'வரலாற்று மாந்தர்களை' அடையாளம் கண்டுபிடிப்பதன் மூலம் தம் அரசியல் அறிவுக்கூர்மையை திரையரங்கில் வெளியிடுகிறார்கள் தொண்டர்கள்.

எம்.ஜி. ராமச்சந்திரன், கருணாநிதி ஆகிய இரண்டு தனிநபர்களின் வரலாற்றைக் கூறுவதாக இருந்தாலும் அது திராவிட இயக்க வரலாற்றிலிருந்து பிரிக்கவொண்ணாதது. ஆனால் பார்ப்பன எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, பகுத்தறிவு, இந்தி எதிர்ப்பு போன்ற அனைத்தையும் கழுவிச் சுத்தம் செய்துவிட்டு, இவற்றுக்காகத் தம் வாழ்க்கையைக் கொடுத்த தொண்டர்களை 'இருவரின்' முதுகுக்குப் பின்னாலிருந்து, மேடையின் மேலிருந்து நமக்குக் காட்டுகிறார் மணிரத்தினம்.

இவ்வாறு, "கங்கை கொண்டான், கடாரம் கொண்டான்" பாணியில்தான் வரலாறு சொல்லப்பட வேண்டும் என்பதில் திராவிட இயக்கத் தலைவர்களுக்கும் மணிரத்தினத்திற்கும் பாரிய கருத்து வேறுபாடு கிடையாது.

படச்சுருளில் மணிரத்தினம் பதிவு செய்திருக்கும் வரலாற்றைக் காட்டிலும் திருத்தமாக, கறுப்பு வெள்ளையில் குமுதத்தில் ஒரு திராவிட இயக்க வரலாறு வெளியாகிக் கொண்டிருக்கிறது.

எம்.ஜி. ராமச்சந்திரனின் 'அனைத்து' விவகாரங்களுக்கும் கணக்கப்பிள்ளையாக இருந்த (இதைவிட கவுரவமாக இவரை அறிமுகப்படுத்த முடியாது) ஆர்.எம். வீரப்பன் தமிழ்நாட்டினுடைய எதிர்காலத்தின் மீது கொண்டிருந்த அக்கறையின் காரணமாக புரட்சித் தலைவியின் பிடியிலிருந்து புரட்சித் தலைவரை விடுவிக்க, தான் பட்ட பாடுகளை விவரிக்கிறார்.

அதைப் படிக்கும்போது காவல்காரன்... உலகம் சுற்றும் வாலிபன்... ரிக்ஷாக்காரன்... என்று ஒரு புதிய கால வரிசையில் திராவிட இயக்கத்தின் வரலாறு நம் கண்முன் விரிகிறது. இந்தி எதிர்ப்புப் போராட்டமோ, விலைவாசி எதிர்ப்புப் போராட்டமோ அல்ல, எம்.ஜி.ஆர். குண்டடிபட்ட 'வரலாற்று நிகழ்ச்சி'தான் 1967 இல் காங்கிரசு தோற்கடிக்கப்படுவதற்குக் காரணம் என்ற 'உண்மையை' வாசகர்களின் முகத்தில் விசிறியடிக்கிறார் வீரப்பன்.

கிளியோபாட்ராவின் மூக்கு சப்பையாக இருந்திருந்தால் உலக வரலாறு வேறுவிதமாக இருந்திருக்கும் என்கின்ற வரலாற்றை ஏற்க மறுப்பவர்கள் 'பாட்சா' படத்தின் மூலம் தமிழகத்தின் தலைவிதியை மாற்றியமைத்த வீரப்பனின் வரலாற்றுப் பாத்திரத்தையும் மறுப்பவர்களாவார்கள்.

இதுதான் மணிரத்தினத்தின் பார்வை; திராவிட இயக்கத் தலைவர்களின் பார்வை. இயக்கத்தின் லட்சியம், போராட்டங்கள், தியாகங்கள் என்று காமிராவை கீழிருந்து மேடையைப் பார்க்குமாறு மாற்றித் திருப்பினால் கதாநாயகர்களாக இருந்தவர்களே இடைவேளைக்குப் பின் வில்லனாக மாறும் விபரீதத்தை எதிர்கொள்ள வேண்டிவரும்.

இருப்பினும், திராவிட இயக்கத்தின் தலைவர்களின் துரோகத்தையும், கோழைத்தனத்தையும், இரட்டை வேடத்தையும், பிழைப்புவாதத்தையும் விமர்சிக்க வேண்டுமானால், அவ்வாறு விமரிசிப்பவருக்கு அதன் லட்சியத்தின்மீது குறைந்தபட்சம் ஒரு அக்கறை இருக்க வேண்டும்.

மணிரத்தினமோ ஒரு வியாபாரி. ஆனால் 'கொள்கையுள்ள' வியாபாரி அல்ல.

பம்பாய், ரோஜா திரைப்படங்களின் வாயிலாகத் தான் நிற்குமிடம் எது என்பதனை அவர் ஏற்கனவே தெளிவுபடுத்தி விட்டார். இருவர் படத்திலோ நிற்குமிடம் தெரியாமல் ஒளிந்து கொண்டு கல்லெறிகிறார்.

கொள்கையில் உறுதியாக இருக்கும்போது எதிரிகள் தாக்குகிறார்கள்; கொள்கையில் கைவிட்டு ஓடும்போது கேலி செய்கிறார்கள். சாஷ்டாங்க நமஸ்காரத்தைத் தன் பண்பாடாகக் கொண்ட சோ, காலில் விழும் கலாச்சாரத்தைக் கேலி செய்கிறார்; தி.மு.க.-வினரின் பக்தி மயக்கத்தைக் காட்டி, 'பாடாவதியாகிப் போன சித்தாந்தம்' என்று பகுத்தறிவுக் கொள்கையை கேலி செய்கிறது இந்தியா டுடே. இவற்றுக்குச் சற்றும் சளைக்காத வன்மத்துடன் படம் முழுவதும் அலைகிறது மணிரத்தினத்தின் காமெரா.

தேர்தலில் வெற்றி பெற்று வேகமாய் அலுவலகத்தில் நுழைந்து தான் அமரவிருக்கும் முதல்வர் நாற்காலியை ஆசையாய் வருடுகிறாரே கருணாநிதி (பிரகாஷ் ராஜ்), அப்போது காமெரா சில கணங்கள் காத்திருந்து 'பார் பதவிப் பித்தனை' என்று விரல் நீட்டுகிறது. 'இதே நாற்காலியில் கொல்லைப்புறமாக ஏறிக் குதித்தவர்தானே

www.padippakam.com

உங்கள் ராஜகோபாலாச்சாரி'' என்று நம் நாக்கு நுனி வரை வந்துவிட்ட வசவை ''நேருவின் மகளே வருக'' என்ற குரல் உள்ளே தள்ளிப் பூட்டுகிறது.

'வி - டு - த - லை — விடுதலை' என்ற முழக்கத்தின் பின்னணியில் ஜெயலலிதா (ஐஸ்வர்யா ராய்) தனது பின்புறத்தை நம் முகத்துக்கு நேரே அசைக்கிறார். (முகத்தை அல்லவா காட்டச் சொன்னார் அண்ணா). அது சமூக நீதிகாத்த வீராங்கனையின் பின்புறம் என்பதை அறிந்த பின் தலை கவிழ்த்தான் முடிகிறது.

உலகம் உருண்டை என்பதில் நமக்கும் அத்வானிக்கும் கருத்து வேறுபாடு கிடையாதுதான். ஆனால் அந்த உருண்டையைத் தாங்கி நிற்பது ஒரு பன்றியின் மூக்கு என்ற தனது கருத்தை தண்ணீருக்கு அடியில் அல்லவா ஒளிந்து வைத்திருக்கிறார் அத்வானி! திராவிட இயக்கம் குறித்த நமது விமர்சனத்திற்கும் மணிரத்தினத்தின் விமரிசனத்திற்கும் உள்ள வேறுபாடு இத்தகையதே.

''ஒளிந்து கொள்வதுதான் கலை — ஒளியத் தெரியாதது பிரச்சாரம்'' என முழங்கும் அழகியல் உபாசகர்கள் மணிரத்தினத்தின் குருகுலத்தில் செருப்பு துடைக்கலாம்.

காமெராவை ஒளிந்து கொள்வதற்கான கதவாகவும், லென்சை சாவித்துவாரமாகவும் பயன்படுத்தி பாத்திரங்களை அவர்களின் 'பன்முகத் தன்மை' யோடு நமக்கு அறிமுகம் செய்கிறார் மணிரத்தினம்.

கொஞ்சம் லட்சியத் தாகமும், அதை மிஞ்சும் பதவி மோகமும் கொண்டவராக இளைஞர் கருணாநிதி; அவரது நரித்தனத்தை நாடகபாணியில் ரசிகர்களுக்குத் தெரிவிப்பதற்காகவே முகத்துக்கு வெளியில் உருளும் பிரகாஷ் ராஜின் விழிகள்; பதவிக்காக நண்பனைப் பயன்படுத்திக் கொண்டு பிறகு உதறி, அவன் மரணத்திற்குப் பின் அவலச் சுவை ததும்ப இருவரது கனவையும் நிறைவேற்ற சபதம் ஏற்கும் முதியவர் கருணாநிதி.

சினிமாக் கதாநாயகனாவதை மட்டுமே லட்சியமாகவும், வறுமை ஒழிப்பைக் கனவாகவும் கொண்ட இளைஞனாக எம்.ஜி.ஆர். ''கனவை வியாபாரம் செய்து தன் லட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ளத் திட்டம் போட்ட கயவன்'' என்று முடிவுகட்ட உங்களை அனுமதிக்காத மோகன் லாலின் அப்பாவி முகபாவம்.

நண்பனின் நரித்தனத்தால் கட்சியிலிருந்து வெளியேற்றப்படும் அவலம்; ஐஸ்வர்யா ராயிடம் மனதைப் பறிகொடுக்கும் பலவீனமான நடுத்தர வயதுக்காரனின் அவலம் - பழைய மனைவியுடன் உருவ ஒற்றுமை என்று அதற்கொரு சப்பைக் கட்டு; பழைய 'கூட்டுக்காரனை'ச் சிறையிலிட நேர்ந்ததை எண்ணித் துன்புறும் அவலம்; கைக்கு அடங்காத சக்திகளின் திருவிளையாடலாக ஆட்சியின் ஊழல்கள்; பிறகு, உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு — என்ற வசனத்துடன் மரணம்.

முறையாக வளர்க்கப்படாததால் 'திமிர் பிடித்தவள்' என்று மற்றவர்கள் கருதிக்கொள்ளும் விதத்தில் வளர்ந்து விட்ட ஜெயலலிதா; விருப்பமில்லாமல் சினிமாவிற்குள் தள்ளப்பட்டு, விரும்பியோ விரும்பாமலோ வைப்பாட்டியாகி, தாலிகட்டிக் கொள்ள விரும்பியும் மறுக்கப்பட்டு, கால வெள்ளத்தால் ஒதுக்கப்பட்டு, பிறகு நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் போது 'தற்செயலாக' எம்ஜியாரை ஒரு பரிதாபப் பார்வை பார்க்கும் ஜெயலலிதா.

''குறிப்பிட்ட யாரையும் கைநீட்டிக் குத்தம் சொல்ல வரலை. மொத்தமாகவே ஏதோ குளறுபடி ஆகிப் போச்சு... பல லட்சியங்கள் எனக்கும் தான் வாலிபப் பருவத்தில் இருந்தது. நான் சினிமாவில் வளர்ந்த பிறகு என்னிடமிருந்தும்தான் அதெல்லாம் காணாமல் போச்சு. இப்படிப் பாதை மாறிப்போன பர்சனல் துக்கத்தையும் சேர்த்துத்தான் நான் படமா வெளிப்படுத்தியிருக்கேன்னு கூட வெச்சுக்கலாம்.''

— மணிரத்தினம்
(ஆனந்த விகடனில்)

**திராவிட இயக்கத்தின் தலைவர்களின் துரோகத்தையும், கோழைத்தனத்தையும், இரட்டை வேடத்தையும், பிழைப்புவாதத்தையும் விமர்சிக்க வேண்டுமானால், அவ்வாறு விமரிசிப்பவருக்கு அதன் லட்சியத்தின்மீது குறைந்த பட்சம் ஒரு அக்கறை இருக்க வேண்டும். மணிரத்தினமோ ஒரு வியாபாரி. ஆனால் 'கொள்கையுள்ள' வியாபாரி அல்ல.**

இளமையில் சோசலிஸ்டாக இருந்து பின்னர் பாசிஸ்டாக மாறிய முசோலினியின் துயரம்! மீண்டும் கண்டக்டர் வேலைக்குப் போக நினைத்தும் போகமுடியாத கோடீசுவரர் ரஜினியின் துக்கம்! ஒரு வேளைச் சோற்றுக்குக் கஷ்டப்பட்டு பின்னர் கோடம்பாக்கத்தையே தனது அந்தப்புரமாகவும், தமிழகத்தைத் தன் பரம்பரைச் சொத்தாகவும் மாற்றிக் கொண்ட எம்ஜியாரின் அவலம்; கதாநாயகன் வந்தால் எதற்கு எழுந்திருக்க வேண்டும் என்று தன்மானக் குரல் எழுப்பிய பெண்மணி, வேரறுந்த மரமாக மந்திரிகள் தன் காலில் விழுவதைச் 'சகித்துக் கொள்ள வேண்டிய' அவலம்! சிங்கள் டீயை இரண்டாக்கிக் குடித்தவரின் குடும்பம் தொழிலதிபர் குடும்பமாக மாற நேர்ந்த அவலம்! கடைசியாக, என்னென்னவோ (யார் கண்டது) கனவுகளுடன் சினிமா எடுக்க வந்து, சனியன் பிடித்த பணத்தைக் கோடிகோடியாகக் கொட்டும் படங்களை எடுக்க நேர்ந்த மணிரத்தினத்தின் அவலம்!

இவர்களுடைய கனவுகளைக் கலைத்த அந்த சாத்தான் யார்? இவர்களுடைய வாழ்க்கைப் படகை நேரெதிர்த் திசையில் திருப்பி, லட்சியப் பயணத்தைச் சீர்குலைத்த சூறாவளி எது? இந்தச் சருகுகளை அரியணையில் ஒட்டவைத்த பேய்க்காற்று எது? வரலாறா?

வரலாறு மனிதர்களின் மூலம் அல்லவா இயங்குகிறது! திராவிட இயக்கத்தின் வரலாற்றில் இந்த இரு மனிதர்களின் பாத்திரம் என்ன?

''இவ்வளவுக்கும் மத்தியில் நட்பு என்னும் உணர்வு நெஞ்சின் ஆழத்தில் இருந்திருக்கக்கூடும்'' என்பதை மணிரத்தினம் அற்புதமாகக் காட்டிவிட்டதாகப் புல்லரித்துப் போகிறது 'செம்மலர்'

''அரசியல் எதிரி — ஆனால் அருமை நண்பன்'' — இந்த ஒழுக்கக் கேட்டுக்கே ஒரு ஒளி வட்டம் கட்டியது திராவிட இயக்கமல்லவா?

இருவரின் கனவையும் நனவாக்குவதாக கலைஞர் (பிரகாஷ் ராஜ்) இரங்கற்பா பாடுவதுதான் படத்தின் கடைசிக் காட்சி.

தாளமுத்து - நடராசன் என்று இருவர் இருந்தனர். அவர்களும் கனவு கண்டனர் — எழும்பூரில் ஒரு பத்தடுக்கு மாளிகைக்குத் தங்கள் பெயர் சூட்டப்பட வேண்டும் என்று அல்ல.

■ மருதையன்

படிப்பகம்

www.padippakam.com

# எதிலும் தாராளமயம்: இந்திய அரசு முதல் குமுதம் அரசு வரை

**மை**ய அரசின் தாராள மயம் என்பதென்ன? குமுதம் 'அரசின்' தாராளமயம் என்பதென்ன? ஒன்று: பொருளாதாரம்; இன்னொன்று: பண்பாடு. பொருளாதாரத் துறையில் தாராளமயமாக்கலை மைய அரசும், பண்பாட்டுத் துறையில் தாராளமயமாக்கலை குமுதம் அரசும் செய்கிறார்கள். இந்த இரண்டுக்குப் பின்னும் ஒரு அரசியல் இருக்கிறது.

இந்த வாரம் 'எக்ஸ்பிரஸில்' ஒரு செய்தி படித்தேன். சோவியத் யூனியனாக இருந்து சிதறுண்டுபோய் பிரிந்து விட்ட சூழ்நிலைமையில் செக்கோஸ்லாவாகிய நாட்டிற்கு ஒரு பத்திரிகையாளர் போய்வந்து 'மாஸ்கோவும், பிராகும் (PRAGUE) ஐரோப்பாவில் விபச்சாரத்தின் தலைநகரங்களாக மாறி விட்டன' என்று எழுதுகிறார்.

இந்த மாற்றம் ஏன் நடந்தது? இதற்கு முன்னாடியிருந்த ரசியா பற்றி நமக்கு கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் முழுதும் தனியார்மயமாக்கப்பட்டுத் தனியார் முதலாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டபின் அது எப்படி இருக்கிறது எனில் முன்னர் இருந்ததைவிட மோசமாக இருக்கிறது;

எங்கெல்லாம் தனியார்மயமாக்கிக் கொண்டு வருகிறார்களோ அங்கெல்லாம் இப்படித்தான் நடந்து வருகிறது. அதுவும் எப்படிப்பட்ட தனியார்மயம்? எல்லாம் வெளிநாட்டு மூலதனம். வெளிநாட்டு நிறுவனங்கள் வந்தால் 'வாங்க'ன்னு சொல்லணும், 'இருங்க'ன்னு சொல்லணும். 'இப்படி எல்லாம் செய்யாதீங்க'ன்னு மக்கள் யாராவது சொன்னால் அவர்களை கவனித்துக் கொள்கிற வேலைய் மட்டும் அரசாங்கம் செய்தால்போதும். இது தான் 'தனியார்மயமாதலின்' அடிப்படை விஷயம்.

உதாரணத்திற்கு மின்சாரம் இருக்கிறது. அதைத் தனியாரிடம் ஒப்படைக்கும் வேலைகள் மிகமிக வேகமாக நடக்கின்றன. மின்சாரம் இப்படி ஒப்படைக்கப்பட்டால் என்ன ஆகும் என்று பத்து வருடம் கழித்து நினைத்துப் பார்க்கவும் பயமாக உள்ளது. அப்போது மின் கட்டணம் சமாளிக்க முடியாதபடி உயர்ந்து விடும். அரசாங்கம் உயர்த்தினால் ரிட் மனு (வழக்கு) தாக்கல் செய்ய சட்டத்தில் வழி இருக்கிறது.

ஆனால் தனியாரிடம் போனால் சட்டரீதியான உரிமை கூட இல்லாமல் போய்விடுகிறது. மின் கட்டணம் இப்படி தனியார்மயம் ஆனவுடன் ஏற்றிக் கொண்டு போகப்போகிறார்கள். உனக்கு . கட்டமுடியவில்லையா, உனக்கு எதற்கு மின்சாரம்? யாருக்கு வசதியிருக்கிறதோ அவர்கள் மின்சாரம் பயன்படுத்தலாம். யாருக்கு வசதி உள்ளதோ அவர்களுக்கு வீடு இருக்கட்டும், யாருக்கு வசதியிருக்கிறதோ அவர்கள் காரில் வரட்டும், வசதியில்லாதவர்கள்? அவர்கள் எல்லாம் புள்ளிவிவரங்களில் இருக்கிற நபர்களாக இருந்தால்போதும்.

எனவே யாரெல்லாம் பணக்காரர்களாக, நிலச்சுவாந்தார்களாக, தொழிலதிபர்களாக இருக்கிறார்களோ அவர்கள் இந்த சமூகத்தில் இருக்கட்டும். மற்றவர்கள் எல்லாம் ஏன் இருக்கிறீர்கள் என்று நம்மையெல்லாம் நோக்கி உலக வங்கி கேட்ட கேள்வியை மறைமுகமாக நம்முடைய அரசாங்கங்கள் தொடர்ந்து நம்மிடம் கேட்டுக் கொண்டிருக்கின்றன.

சமீபத்தில் விலையெல்லாம் உயர்ந்து விட்டது, அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கிறது என்று நிருபர்கள் கேட்டவுடனே தமிழக முதலமைச்சர் மக்களின் வாங்கும் சக்தியை அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுப்பதாக உள்ளோம் என்று கூறுகிறார். இது கேட்பதற்கு இந்திய ஐந்தாண்டுத் திட்டங்கள் போல் அழகாக இருக்கிறது.

இன்றைக்கு இதைக்கூறும் முதலமைச்சர் 45 வருடங்கள் முன்னாடி பராசக்தியில் இதை எதிர்த்து வசனம் எழுதியிருக்கிறார். யோசித்துப்பார்த்தால், இதை எதிர் அணியில் இருந்து கேள்வி கேட்டிருக்கிறார். ஆனால் இன்றைக்கு உலக வங்கி சொல்வதையும், தேவகவுடா கூறுவதையும் சட்டம்போட்டு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். எந்த அரசாங்கமாக இருந்தாலும் — அது ஜெயலலிதா அரசாக இருந்தாலும் சரி, கலைஞர் அரசாக இருந்தாலும் சரி, — அது உலக வங்கி போடும் சட்டத்தை நிறைவேற்றும் அரசாகவே இருக்க முடியும்.

இந்தத் தாராளமயமாக்கும்போது என்ன அடிப்படையில் இதையெல்லாம் ஆரம்பித்தார்கள் என்று பார்க்க வேண்டும். அதாவது — பொதுத் துறையில், மக்களின் வரிப் பணத்தைப் போட்டு ஆரம்பித்த கம்பெனிகளில் நஷ்டம் வருகிறது என்று கூறி பொதுத் துறை நிறுவனங்களில் பகுதிபகுதியாகத் தனியார் கையில் ஒப்படைத்து வருகிறார்கள். பொதுத் துறையில் நட்டம் என்பது ஒரு பொய்; சாக்குப்போக்கு.

ராஜீவ் காந்தி தொடங்கி கவுடா வரைக்கும் எந்தெந்த பொதுத் துறை நிறுவனம் இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றனவோ அதைத்தான் தனியாரிடம் கொடுப்பதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இதைத்தான் 'மூலதனமிடுதலை விலக்கும் / நீக்கும் (DI-sinvestment Policy) என்கிறார்கள்.

உதாரணத்திற்கு BHEL, ரயில்வே, அஞ்சல் துறையில் இவ்வாறு நடைபெறுகிறது. இப்போது நமக்குச்




படிப்பகம்

www.padippakam.com

சந்தேகம் வருகிறது. ''அய்யா, நட்டத்தில் இருப்பதைத்தான் கொடுப்பதாகச் சொல்ல ஆரம்பித்தீர்கள் - இப்போது லாபத்தில் நடப்பதை ஏன் கொடுக்கிறீர்கள்?'' உண்மையைச் சொன்னால், தனியார் முதலாளிகளுக்கு நட்டத்தில் இருக்கும் எதையுமே எடுத்து நடத்தக் கூடிய திறமை எந்தக் காலத்திலும் இருந்தது கிடையாது. இதற்குப் பல உதாரணங்களை உலக வரலாற்றிலிருந்தே எடுத்துச் சொல்ல முடியும்.

அப்படி எல்லாவற்றையும் தனியார் கையில் கொடுப்பதால் என்ன நடக்கும்? நகர்ப்புறம் சார்ந்த மேல்தட்டு வர்க்கத்திற்கு மட்டுமே மொத்தப் பயனும் போகும். மற்றவர்கள் புறக்கணிக்கப்படுவார்கள். இங்கேயும் ஒரு சிக்கல் வருகிறது. ஓரளவு படித்தவர்கள் அறிவு ஜீவிகள் சூழ்நிலைமையால் உந்தப்பட்டு மக்கள் சார்பாகச் சென்று விட்டால் என்ன ஆவது?

அப்படியாகாமல் தடுக்க குமுதம் மாதிரியான பத்திரிகைகளில் தாராளமயமாக்கல் செய்யப்படுகிறது. அதாவது பண்பாட்டுத் தாராள மயம் ஆரம்பிக்கிறது. இது தவிர மக்களிடம் கொந்தளிப்பு ஏற்படாமல் தடுக்கவும், பண்பாட்டுத் தாராளமயம் பயன்படுத்தப்படுகிறது.

ஏன் குமுதத்தை எடுத்துக்காட்டாக எடுத்துக் கொள்கிறோம் என்றால் குமுதம் பண்பாட்டுச் சீரழிவில் முதலிடம் வகிக்கும் ஒரு பத்திரிக்கை என்பதால்.

சமீபகாலத்தில் குமுதத்தில் வந்த ஒரு கதை மற்றும் சில செய்திகளை நான் கூறவேண்டும். ஏனெனில், இவர்கள் எந்த மாதிரி கதை எழுதுகிறார்கள், இவர்கள் பத்திரிக்கை யாருக்கு என்பதை நாம் அறிய வேண்டும்.

ஒரு கதை. இரண்டுபேர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஒருவன் தன்னுடைய காமவெறிக்கு அவசரமாக ஒரு பெண் வேண்டும் என்று கேட்கிறான். அதற்கு மற்றவன் அது ஒன்றும் பிரச்சனையில்லை, எப்படிப்பட்ட பெண் வேண்டும் என்கிறான். அவள் இப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்று வருணிக்கும்போதே இவனுக்குச் சபலம் அதிகமாகி விடுகிறது. அது அவனது அக்காள்தான் என்பதைத் தெரிந்து கொண்ட இவன் பதிலுக்கு என்ன வேண்டும் என்று கேட்கிறான். அதற்கு ஒருநாள் இவன் தன்னோடு படுக்க வேண்டும் என்று கேட்கிறான். ஓரினச் சேர்க்கை வெறிக்காக இந்தப் பையன் தன் அக்காளை மற்றவனுக்குக் கூட்டிக் கொடுப்பதாகக் கூறுகிறான். இதுதான்

**இவர்களுக்கு வேறொரு பெயரை உலக வங்கி ஒழுங்கா கொடுத்திருக்கிறான். இதை பெப்சியைக் கேட்டா சரியாகச் சொல்லுவான். அவன் இவர்கள் எல்லாம் (Human beings) (மனிதர்கள்) என்று கூறுவதில்லை. இவர்களுக்கெல்லாம் அவன் வைத்திருக்கும் பெயர் consumer 'கன்ஸ்யூமர்' (நுகர்வோர்)**

அந்தக் கதை.

இதே குமுதத்துல 'அரசு கேள்வி - பதிலி'ல் ஒரு கேள்வி. ஒரு பெண்ணைக் கேலி செய்ததாம் ஒரு கும்பல். 'ஏன் இப்படிச் செய்கிறீர்கள்', என்று கேட்ட ஒரு பையனை அடித்துக் கொன்று விட்டார்களாம். இதுபற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள் என்று 'அரசு' விடம் கேட்கிறார் வாசகர். ''ஒருகணம் உங்களை அந்த செத்துப்போன பையனின் அம்மாவாக நினைத்துப் பாருங்கள். அவனை எவ்வளவு கஷ்டப்பட்டு மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பிப் படிக்க வைத்திருப்பார் என்று அந்தப் பையனின் தாயாக நினைத்துப்பாருங்கள் என்கிறார் அரசு. இதைப் படித்ததும் அரசு இவ்வளவு உருக்கமாக



எழுதுகிறாரே என்று எனக்கு அழுகை வந்து விட்டது!

இதே இதழில் ஒரு மூன்று பக்கம் முன்னாடி நடிகை மந்த்ராவுக்கு மார்பகம் மிகவும் பெரியதாக உள்ளது இதை அறுவை சிகிச்சை செய்து குறைத்துக் கொள்ளப் போகிறார் என்று ஒரு தகவல். அதற்கு ஒரு படம், முகம் மட்டும் புகைப்படத்தைப் போட்டுவிட்டு மார்பகம் மட்டும் ஓவியரை வைத்து பெரியதாக, பூதாகரமாக வரைந்து விட்டார்கள். ஏனெனில் ஆசிரியருக்கு மார்பகம் சிறியதாகத் தெரியுமோ என்று பயம். ஒரு தாயை - அன்னையைப் பற்றி 'அரசு பதிலில்' சிந்திக்கும் நபர், அட நாயே! ஒரு தாயின் மார்பகம் தானடா முலைப்பால் தரக்கூடியது என்று ஏன் யோசிக்கவில்லை? ஏன் இப்படி எழுதுகிறான்? இந்தப் பக்கம் பாசம், இன்னொரு பக்கம் காமம், அதுக்குத் தள்ளிச் சென்று விட்டால் பிரார்த்தனை கிளப், பக்தி சகலமும் இருக்கும்.

பத்திரிக்கைகளில் கொஞ்சம் பக்தி, கொஞ்சம் செக்ஸ் என்பது ஒரு ஃபார்முலா - ஒரு சூத்திரம். குடும்பம் அமைத்து ஆரோக்கியமாக இருக்க வேண்டிய பாலுறவு என்ற விஷயத்தைக் கொச்சைப்படுத்தி விட்டு அதைக் காசு பண்ணுகிறார்கள். அதுவே பண்பாட்டுத் தாராளமயமாக்குதல். காசு பண்ணுவது மட்டுமல்ல, படிப்பவனை சிந்தனையைப் பயன்படுத்தாமல் படிக்க வைக்க வேண்டும்; படிப்பது என்பதே ஒரு நூறு மில்லிச் சாராயம் அடித்ததுபோல இருக்க வேண்டும்.

போதையில்லாத படிப்பு, சிந்தனையைப் பயன்படுத்திப் படிக்கும் படிப்பு என்பது நம் சமூகத்தில் எது சரி - எது தவறு என்பதைச் சுலபமாக அறிய வைக்கக்கூடியது; அந்த விஷயத்தைச் செய்து விடக்கூடாது என்பதற்காகவே இவர்கள் போதை கொடுக்கிறார்கள். இந்தப் போதை கொடுப்பது என்பது அரசாங்கம் சார்ந்த ரேடியோ, தொலைக்காட்சித் துறையிலும் கடந்த 5 ஆண்டுகளாகவே நடந்து வருகிறது.

கலாச்சாரம் இப்படித்தான் இருக்க வேண்டுமென்று திட்டமிட்டே தாராளமயப்படுத்துகிறார்கள். இது வெற்றிகரமாக நடப்பதற்குக் காரணம் என்ன என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

நீங்கள் பல தமிழ்ப் பத்திரிக்கைகளைப் படிக்கின்றீர்கள். இந்த ஜூனியர் விகடன் முதலிய பத்திரிக்கைகளில் பல பகுதிகளைப் பாருங்கள். உதாரணமாக ஒரு வாக்கியம் எழுதினால் அதில் ஏழு சொற்கள் ஆங்கிலச் சொற்களாக

படிப்பகம்

www.padippakam.com

இருக்கும், மீதி நான்குதான் தமிழாக இருக்கும். இந்த ஆங்கிலம் கலந்த தமிழைப் படிப்பவருக்கு ஒழுங்காக ஆங்கிலமும் தெரியாது; தமிழும் தெரியாது.




இப்படி ஒரு நடுத்தர வர்க்கம் தமிழ்நாட்டில் பல லட்சம் பேர். இந்த நடுத்தர வர்க்கம்தான் குமுதம் படிக்கின்றது; ஜூனியர் விகடன் படிக்கின்றது. 'டி.என். சேஷன் மாதிரி வராதுய்யா' என்று பேசிக்கொண்டு போவது இந்த ஆட்கள்தான். இவனுக்கு அரசியலும் தெரியாது. ஐ.ஏ.எஸ். ஆபீசரா இருந்த சேஷன் இந்த 40 வருசமா ஏன் ஒன்றும் செய்யவில்லை? என்று இதையெல்லாம் யோசிப்பதும் இல்லை.

ஏனென்றால் இதையெல்லாம் யோசிக்கிற அறிவே கற்றுத் தரப்படவில்லை, பயிற்றுவிக்கப்படவில்லை; அப்படி இந்த மாதிரி அரைவேக்காடான மனிதர்களை - மனிதர்கள் என்பதே தவறுதான்; உயிரோடு மனிதர்களைப் போன்ற தோற்றத்திலிருப்போரை - உருவாக்கியுள்ளது. இவர்களுக்கு வேறொரு பேரை உலக வங்கி ஒழுங்கா கொடுத்திருக்கிறான். இதை பெப்சியை கேட்டா சரியாகச் சொல்லுவான், அவன் இவர்களை,எல்லாம் Human beings (மனிதர்கள்) என்று கூறுவதில்லை. இவர்களுக்கெல்லாம் அவன் வைத்திருக்கும் பெயர் consumer 'கன்ஸ்யூமர்' (நுகர்வோர்).

இந்த கன்ஸ்யூமர்களோட வேலை என்ன என்று கேட்டீர்களானால், ஒரு தம்ளரில் பெப்சி கொடுத்தால் குடித்துவிட வேண்டும். திருப்பி 'ஐயா இன்னொரு தம்ளர்னு' நீட்ட வேண்டும். அவ்வளவுதான். இதைத்தான் வாங்க வேண்டும். அதோட விலை நேற்று வாங்கும்போது 10 ரூபாய், இன்றைக்கு 12 ரூபாய் ஆயிற்றே என்பது அவன் மூளைக்கு உறைக்கக்கூடாது.

இப்படி யோசனை இல்லாத நுகர்வோரை உருவாக்க வேண்டும். இவர்கள் வாங்கிக் கொண்டேயிருப்பார்கள், வாங்குவதற்குத் தேவையான பணத்தை சம்பாதித்துக் கொண்டேயிருப்பார்கள்.

இந்த மெஷின்கள் இவர்களைப் போலவே இன்னொரு குழந்தை மெஷின்களை உருவாக்க வேண்டும். இந்தக் குட்டி மெஷின்களை டி.வி. பெட்டி முன்னால் உட்கார வைத்துவிட்டால் போதும். அதுவே சிறந்த மெஷினாக உருவாகிவிடும். அப்பா அம்மா கஷ்டப்படத் தேவையில்லை. அப்படி மெஷின்களை உருவாக்கும் வேலைதான் பண்பாட்டு ரீதியாக நடக்கிறது.

இப்படி பொருளாதாரத் துறையைத் தாராளமயமாக்க வேண்டும் என்றால் பண்பாட்டுத் துறையைத் தாராளமயமாக்க வேண்டும். இதைச் செய்தால்தான் அதைச் செய்ய முடியும். பண்பாட்டு ரீதியாக அடிப்படை மனித நேயம், பகுத்தறிவு இவற்றையெல்லாம் புறக்கணித்துவிட்டு மனிதனை வேகமா இயந்திரமாக்கும் முறையை பண்பாட்டுத்துறையில் செய்துதான் தீர வேண்டும்.

இவர்களை அரசியலிலும் நுகர்வோராக மாற்ற வேண்டும். அரசியலில் இவர்கள் நுகர்வோராக இருக்கும்போது என்னவாக இருக்கிறார்கள் என்றால் ப. சிதம்பரத்தின் நுகர்வோராக மாறுகிறார்கள். சினிமாவுக்குப் போனால் அங்கு ஒரு நடிகையோட நுகர்வோராக மாறி விடுகிறார்கள். எனவே ஒவ்வொரு துறையிலும் இவர்கள் நுகர்வோராக இருப்பார்கள். ஒவ்வொரு துறையிலும் இவர்களுக்கான நட்சத்திரங்களை உருவாக்கி வைத்துள்ளார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் விஷயங்களை ஒரு வசதி கருதி தான் நான் தொகுத்து வழங்கியிருக்கிறேன் புதிதாக எதையும் நான் கூறவில்லை.

ஆனால் இந்த நிலைமையில் நான் பேச்சை முடித்துக் கொண்டுவிட முடியாது. இதில் இருந்து நாம் வெளியே வர முடியாதா? இதை மாற்ற முடியாதா? நாம் கொஞ்சம்பேர் வந்துவிட்டால் போதுமா? இன்னும் நிறைய பேர் வரவேண்டாமா? அதற்கான வழிகளும் எல்லாக் கதவுகளும் அடைபட்டுப் போய்விட்டதா? என்று கேள்விகள் வரும்போது நாம் இரண்டுவிதமான பணிகளைச் செய்ய வேண்டியுள்ளது — தனி நபராகச் சில வேலைகள்; சமூக உறுப்பினராகச் சில பணிகள் — அரசியல் இயக்கமாக சில வேலைகள். சமூகத்தில் ஒரு பணியாற்றி விட்டு தனிநபராய் போன உடன் வேறொரு முறையில் இருந்து விட முடியாது.

ஒரு கூட்டத்தைக் கூட்டி ஒரு விஷயத்தைக் கண்டித்தோமானால் அந்த விஷயத்தை தனி நபராய் இருக்கும்போதும் கண்டிக்க வேண்டும். தனிநபராய் இருக்கும்போது நுகர்வோராய் மாறிவிடக் கூடாது. தனி நபராய் என்ன செய்ய வேண்டும் எனில், இந்தப் பத்திரிக்கை, தொலைக்காட்சி இவையெல்லாம் ஏதோ ஒரு விதத்தில் நாம் கொடுக்கும் வரிப்பணத்தில்தான் நடக்கிறது. நம் பணத்தில் நடந்து கொண்டிருப்பதால், இதை நாம் தட்டிக் கேட்க வேண்டும். இது அடிப்படை விஷயம்.

நமக்கு அடிப்படையாக உரிமையிருக்கிறது. இதை மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும். யாரோ டாட்டா பணம் போட்டிருக்கிறார், குமுதம் செட்டியார் பணம் போட்டிருக்கிறார் என்று இருக்கக் கூடாது.

நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட இந்தச் சமூகத்தை எப்படிக் கொடுத்துவிட்டுச் செல்லப்போகிறோம்? என் வீட்டுக் குழந்தைகள், உங்கள் வீட்டுக் குழந்தைகள், நம் எல்லார் வீட்டுக் குழந்தைகளுக்கும் எப்படிப்பட்ட சமூகத்தைக் கொடுத்துவிட்டுச் செல்லப்போகிறோம்? அந்தக் குழந்தைகளுக்கு நாம் எப்படிப்பட்ட கல்வியைக் கொடுத்துவிட்டுப் போகப் போகிறோம்?

இவைதான் நமக்கு அடிப்படையாய் இருக்க வேண்டிய கேள்விகள். அதற்கு எதிராய் நடக்கும் அத்தனை விஷயங்களை எதிர்ப்பதும் கண்டிப்பதும்தான் நமக்கு இன்றைய வேலையாக இருக்கிறது.

அந்த வேலையில் ஈடுபட்டுள்ளவர்களோடு நம் கருத்து ஒத்துப் போகும்போது இணைந்தும் வேலை செய்ய வேண்டும், இப்படிப்பட்ட ஒரு கருத்துப் பரிமாற்றத்துக்கான வாய்ப்பாக இந்தச் சந்திப்பு அமைந்தது. நன்றி. ■

*(23.02.97 அன்று சென்னை 'புதிய கலாச்சாரம்' வாசகர் வட்டத்தில் பத்திரிகையாளர் ஞாநி ஆற்றிய உரையின் சுருக்கம்.)*

படிப்பகம்

www.padippakam.com

# தன்னார்வக் குழுக்கள்:

# வல்லரசுகளின் வல்லூறுகள்

''டி.வி.எஸ். நிறுவனத்தில் ஒரு தொழிற்சங்கத்தை ஏற்படுத்த நான் பெரிதும் முயற்சி எடுத்தேன். அதன்படி நாங்களே ஐ.என்.டி.யு.சி. சங்கத்தை இங்கே நிறுவினோம்... எப்படியும் ஒரு தொழிற்சங்கம் உருவாகத்தானே போகிறது. அது நமக்கு விசுவாசமான சங்கமாக இருந்தால் நல்லதல்லவா'' — இப்படிக் கேட்டார் ஓர் அமெரிக்க ஆராய்ச்சியாளரிடம் டி.வி.எஸ். முதலாளி. (ஆதாரம்: பிசினஸ் இந்தியா, மார்ச் - ஏப். 1986).

இதே கொள்கையின் அடிப்படையில் ஏகாதிபத்தியங்களால் தோற்றுவிக்கப்பட்டு எண்ணிக்கையில் அடங்காத அளவு இயங்கி வருகின்றவை தாம் தன்னார்வக் குழுக்கள்.

நாடு முழுவதும் ஆங்காங்கே சமூக சேவை உணர்வு ஊற்றெடுக்க அப்படியே அதிலிருந்து தோன்றியவை அல்ல இந்த அமைப்புகள். மாறாக உலக அளவில், மையப்படுத்தப்பட்ட முறையில் ஏகாதிபத்திய சிந்தனையாளர்களாலும், வல்லுநர்களாலும் நன்கு திட்டமிடப்பட்டு, பல ஆயிரம் கோடி டாலர் நிதி ஒதுக்கப்பட்டு கட்டமைக்கப்படும் வலைப்பின்னலின் சிறு சிறு அங்கங்கள் தாம் இந்த ''தன்னார்வக் குழுக்கள்''

எங்கெல்லாம் சுரண்டலும், ஒடுக்குமுறையும் அவலவாழ்வும் தலைவிரித்தாடுகிறதோ அங்கெல்லாம் அவற்றுக்கு எதிராக மக்கள் இயக்கங்களும் அமைப்புகளும், முற்போக்கு சிந்தனையுள்ள இளைஞர் எழுச்சிகளும் தோன்றும். அவை பாட்டாளிகளின் புரட்சி, தேசிய விடுதலை இயக்கங்களின் பால் ஈர்க்கப்படுவதும் இயல்பே. ஆனால் அவற்றை இடைமறித்து தம் பக்கம் ஈர்த்து, நிறுவனமயமாக்கிக் கொள்ளும் மாற்று மையங்களாகவே இந்த அரசு சாரா - தன்னார்வக் குழுக்கள் இயங்கி வருகின்றன.

அன்றாட வாழ்வில் ஆயிரத்தெட்டுப் பிரச்சினைகளிலும் அதிருப்தி, ஆத்திரமடைந்துள்ள மக்களின உணர்வுகளை நெறிப்படுத்தி, [illegible]டுத்தி அதிகாரபூர்வ, சட்டவரம்புக்குள் அவர்கள் செயல்பாடுகளை முடக்கி வைப்பதற்கு மாற்று அமைப்புகளும், வழிமுறைகளும், சித்தாந்த விளக்கங்களும் ஏற்படுத்தித் தந்து கொண்டே இருக்கவேண்டும்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உலகின் மிகப்பெரிய சுரண்டல் - ஒடுக்குமுறை ஏகாதிபத்தியமாக முன்னுக்கு வந்த அமெரிக்காவை ''உலகின் மிகப்பெரிய கொடை வள்ளல் நாடு'' என்று பீற்றிக் கொண்டு, அதன் புதிய காலனிய ஆதிக்கத்தை மூடிமறைக்க இந்தத் தன்னார்வக் குழுக்கள் பெரிதும்பயன் பட்டன.

அன்றைய அமெரிக்க அதிபர் ட்ரூமன், ''உலகை சிவப்பு அபாயத்தில் இருந்து காப்பாற்றும் பொருட்டு'' முன்வைத்த ''அமெரிக்க அமைதிப் பேரரசு'' திட்டத்தில் மனித நேய நிறுவனங்கள், தன்னார்வக் குழுக்கள் முக்கிய இடம் பெற்றன. போர்டு அறக்கட்டளையோடு, கேர், வோர்ல்டு விஷன் போன்றவையும் சேர்ந்து ஆண்டுக்குப் பலநூறு கோடி டாலர்கள் இந்த ''சமூக சேவைக்காக'' செலவிட்டன.

இவை நேரடியாகவும், பின்தங்கிய ஏழை நாடுகளின் கிராமப்புற வளர்ச்சி மற்றும் சமூக நல அமைச்சகங்களின் மூலமும் பல ஆயிரக்கணக்கான அரசு சாரா நிறுவனங்களை நிறுவி, நிதியுதவி செய்து, கண்காணித்து இயக்கின. 1960களில் உலகம் முழுவதும் உள்ள அரசு சாரா நிறுவனங்களை ஒரு குடையின் கீழ் ஒருங்கிணைத்து ஜெனீவாவைத் தலைமையகமாகக் கொண்ட சர்வதேச தன்னார்வக் குழுக்களின் கவுன்சில் நிறுவப்பட்டது. இதனுடன் ஏகாதிபத்திய ஆய்வு நிறுவனங்களும், சிந்தனையாளர் குழுக்களும் ஒருங்கிணைந்து செயல்படத் தொடங்கின.

இப்போது அரசு சாரா நிறுவனங்கள், தன்னார்வக் குழுக்கள் இரண்டு மட்டங்களில் பணிபுரிகின்றன. ஒன்று நகரப்புறங்களிலும் கிராமப் புறங்களிலும் நேரடியாக மக்களிடம் சென்று ''சமூக சேவைகள்'' புரிவது; இன்னொன்று பிரதானமாக நகர்ப்புறங்களில் தமது தலைமையகங்களை நிறுவி, படித்த அறிவு ஜீவிப் பிரிவினரிடையே சமூக பொருளாதார அரசியல், பண்பாட்டு ஆய்வுகளை - பயிற்சி, கருத்தரங்குகளை நடத்துவது.

> **இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உலகின் மிகப்பெரிய சுரண்டல் - ஒடுக்குமுறை ஏகாதிபத்தியமாக முன்னுக்கு வந்த அமெரிக்காவை ''உலகின் மிகப் பெரிய கொடை வள்ளல் நாடு'' என்று பீற்றிக் கொண்டு, அதன் புதிய காலனிய ஆதிக்கத்தை மூடி மறைக்க இந்தத் தன்னார்வக் குழுக்கள் பெரிதும் பயன் பட்டன.**

காலனிய காலத்திலும் அதற்குப் பிறகு சிலகாலமும் மதப் பிரச்சாரத்துடன் இணைத்து கல்வி - வேலைவாய்ப்பு, சுகாதாரம் - சத்துணவு, கைத்தொழில்கள் என்று பல்வேறு இலவசத் திட்டங்களை நடத்துவதே தன்னார்வக் குழுக்களின் பிரதானப் பணிகளாக இருந்தன.

ஆனால் 1960களின் பிற்பகுதியில் இந்தத் தன்னார்வக் குழுக்களின் செயல்பாடுகளுக்கு ''முற்றிலும் புதிய கோட்பாட்டு அடிப்படைகள்'' வகுத்துத் தரப்பட்டன. இனி மேலும் தன்னார்வக் குழுக்கள் மக்களுக்கான ''இலவசத்திட்டங்கள்'' மேற்கொள்ள வேண்டியதில்லை, அதற்கான அளவு வசதியும் கிடையாது. மக்கள் தமது கோரிக்கைகளுக்காகவும் உரிமைக்காகவும் ''போராடும் வகையில் விழிப்புணர்வு பெறச் செய்வதும் அவர்களுக்கான செயற்பாட்டுக் குழுக்களை அமைப்பதும் தான் இனித் தன்னார்வக் குழுக்களின் பணியாக இருக்க வேண்டும் என்று உலக அளவில் முடிவு செய்யப்பட்டது.

பிரேசிலைச் சேர்ந்த பவுலோ பீரியரின் ''சுரண்டப்படுவோருக்கான கல்வியியல்'', பிலிப்பைன்சினுடைய பவுல் அலின்ஸ்கியின் ''அதிகாரத்தின் தத்துவம்'' ''சிறியதே அழகு'', கிட் டியர்சின் ''விடுதலை இறையியல்''(சூமேக்கரின்) ஆப்பிரிக்காவில் ''கறுப்பின விழிப்புணர்வு இயக்கம்'', ஆசியாவில் புதிய காந்திய, புதிய புத்தக் கோட்பாடுகள் ஐரோப்பா, அமெரிக்காவில் ''புதிய இடதுகள்'' ''இளைஞர் அரசியல் மற்றும் பசுமை இயக்கங்கள்'' ஆகியன தன்னார்வக் குழுக்களின் வழிகாட்டும் கோட்பாடுகளாகின.

இக்கோட்பாடுகளின்படி மதப்பிரச்சார, மதமாற்ற முயற்சிகள் கைவிடப்பட்டு ''மக்கள் பங்கேற்பு அல்லது அடிமட்ட மக்கள் அமைப்புகள்'' மூலம் சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே தமது குறிக்கோள்கள் என்று அறிவித்துக் கொண்டன.

மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், தொழிலாளர்கள் - குறிப்பாக அமைப்பு ரீதியில் திரட்டப்படாத உழைப்பாளிகள், விவசாயிகள், தாழ்த்தப்பட்டவர்களிடையே போய் அவர்களது வாழ்வியல் - சமூக உரிமைகள், மனித உரிமைகள், சுற்றுச் சூழல் - பண்பாட்டுப் பாதுகாப்பு இன்னும் இதுபோன்ற பிரச்சினைகளுக்காக போராடும் ''நடவடிக்கைக் குழுக்கள்'' அமைக்கப்பட்டன.

படிப்பகம்

www.padippakam.com

''மக்களை அணிதிரட்டுவது'', ''அதிகாரம் பெறுதல்'' ''ஒடுக்கப்படுவோரின் விடுதலை'' என்று தீவிரச் சவடால்கள் அடித்த போதும் வர்க்க அணுகுமுறை வர்க்கப் போராட்டம் வர்க்க சித்தாந்தத்தை (திட்டமிட்டு, உணர்வுபூர்வமாகவே) விலக்கி வைப்பதில் குறியாக உள்ளன, இத்தன்னார்வக் குழுக்கள். இத்தகைய நடவடிக்கைக் குழுக்களைத்தான் உண்மையான அடிமட்ட மக்கள் இயக்கங்கள் என்றும் ''புதிய சமூகப் புரட்சியின் முன்னோடிகள்'' என்றும் ஆளும் வர்க்கப் பத்திரிக்கைகள் புகழ்கின்றன.

இவை ''வரலாற்றின் நிகழ்ச்சிப் போக்கில் உணர்வு பூர்வமாகத் தலையிடும் செயற்போக்கு'' என்று தன்னார்வக் குழுக்களின் சித்தாந்தவாதிகள் கூறுகின்றனர் (கோத்தாரி). இவை ''மாற்று வளர்ச்சிக்கான முழுமைபெற்ற இயக்கமாக மலரும் சாத்தியக் கூறு உடையவை'' என்கின்றனர் (டி.எல்.சேத்).

இவையெல்லாம் காட்டுவது என்ன? மக்கள் தமது விடுதலை, உரிமைக்கான கோரிக்கைகளுக்காகப் போராடும் மையங்களாக, கம்யூனிசப் புரட்சியாளர்களின் தலைமையிலான வர்க்க அமைப்புகளை மட்டுமே இனிமேலும் நம்பியிருக்க தேவையில்லை.

அவற்றுக்கு மாற்று மையங்களாக இதோ அரசு சாரா, கட்சி சாரா, வர்க்கம் - அரசியல் சாரா நிறுவனங்கள் இருக்கின்றன என ''மாற்றுக்களை'' வைப்பதுதான். இதன் மூலம் பாலோடீரியர், பவுன் அலின்ஸ்கி, கிட்டியர்சி, ஷுமேக்கர் போன்றவர்களின் கோட்பாடுகளை முன்வைத்து, மார்க்சிய சொற்களைப் பிரயோகிப்பது, பல்வேறு மக்கள் பிரச்சினைகளைக் கையிலெடுப்பதால் இந்த அமைப்புகள் இடதுசாரித் தோற்றம் தருகின்றன.

இந்த அமைப்புகள் தமது களப்பணியிலும் கூட ஒருவித இரகசிய - சதிகார அணுகுமுறையைக் கையாள்வதால் அந்நிய உளவாளிகளும் நாச வேலைக்காரர்களும் ஊடுருவுவதற்கும், அதற்காக ஆட்களைத் தெரிவு செய்து கொள்வதற்கும் இவை பயன்படுகின்றன.

1960-களில் இருந்தே ஏகாதிபத்திய வல்லரசுகளின் புதிய காலனிய தேவைகளுக்காக மேற்கத்திய சமூகவியல், அரசியல், பண்பாட்டு சிந்தனையாளர்கள், பல்கலைக் கழகங்கள் மற்றும் ஆய்வுக் கழகங்கள் கீழை நாடுகளின் தமது சகபாடி நிறுவனங்களுடன் இணைந்து கம்யூனிச சித்தாந்தத்துக்கு எதிராக ''புரட்சிகர மாற்றுகளை உருவாக்கும் பணியில் இறங்கினர்.

''இடது - வலது, முற்போக்கு - பிற்போக்கு என்கிற சித்தாந்த வேறுபாடுகள் அடிப்படையில் தீர்வுகள் முன் வைக்கப்படுவது இனிமேலும் அவசியமில்லை என்பதை முன் வைக்கும் ''சித்தாந்தத்தின் முடிவு'' முதலிய கருத்தாக்கங்கள் பிரச்சாரம் செய்யப்பட்டன. பிரான்சிஸ் புக்குயோமாவின் ''வரலாற்றின் முடிவு'' என்கிற கோட்பாடு பிறகு வந்தது.

வர்க்கம், வர்க்கப் போராட்டம் மற்றும் வர்க்க சித்தாந்தக் காலகட்டம் இனிமேலும் சாத்தியமில்லை, காலாவதியாகி விட்டது என்று ஏகாதிபத்திய சித்தாந்த வாதிகள் பிரச்சாரம் செய்தனர். இவர்கள் ''ஸ்டாலினிசம்'', ''மரபுவழி மார்க்சிசம்'' என்பதாகக் கற்பனை செய்து கொண்ட தத்துவத்தையும் போலிக் கம்யூனிஸ்டுகளின் சமரச செயல்பாடுகளையும் முன்னிறுத்தி மார்க்சிய - லெனினிய சித்தாந்தத்தின் மீதே அவதூறு பரப்பினர்.

புறநிலை யதார்த்தத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை முன்னிறுத்தி மார்க்சிய லெனினியத்தைச் செழுமைப்படுத்துவதாகப் புளுகினர்; மார்க்சிய - லெனினியக் கோட்பாடுகள் ஐரோப்பிய முதலாளித்துவத்தை மட்டுமே ஆய்வுக்கெடுத்துக் கொண்டது என்றும் தாம் மண்ணுக்கேற்ற மார்க்சியம் படைப்பதாகவும் சொல்லி அதைப் பகுதியாகவோ, முழுமையாகவோ நிராகரிக்கும்படி தூண்டினர்.

> இவர்களின் நோக்கமெல்லாம் ஒன்று தான். மார்க்சிய – லெனினியம், வர்க்கம், வர்க்கப் போராட்டம் ஆகியவற்றுக்கு மாற்றாக வர்க்க சமரசத்தையும் பல்வேறு வகை திரிபுகளையும் முன் வைத்து மார்க்சிய லெனினியத்தின் மீதும், புரட்சிகர அமைப்புகளின் மீதும், பாட்டாளி வர்க்க இயக்கத்தின் மீதும் பரந்து பட்ட மக்களை நம்பிக்கை இழக்கச் செய்வதே.

தாமும் மார்க்சியப் புரட்சியாளர்கள் என்று சொல்லிக் கொண்டு கீழை மார்க்சியம் - மேலை மார்க்சியம், இளைய மார்க்ஸ் - முதிய மார்க்ஸ், ஐரோப்பிய கம்யூனிசம், அந்நியமாதல், இருத்தலியல், நவீனத்துவம், அமைப்பியல் வாதம், புதிய இடது சிந்தனைகள் போன்ற பல பிறழ்வுக் கோட்பாடுகளையும் தத்துவங்களையும் பரப்பினர். இதற்காக சார்த்தர், கிராம்சி, மார்க்யூஸ், அல்தூஸ்யர், கெம்யூ, பிராங்·பர்ட் சிந்தனையாளர்கள் போன்ற வகுப்பறை ''மார்க்சியக் கோட்பாட்டாளர்''களின் படைப்புகளைக் கடத்தி வந்தார்கள்.

இவர்களின் நோக்கமெல்லாம் ஒன்றுதான். மார்க்சிய - லெனினியம், வர்க்கம், வர்க்கப் போராட்டம் ஆகியவற்றுக்கு மாற்றாக வர்க்க சமரசத்தையும் பல்வேறு வகை திரிபுகளையும் முன்வைத்து மார்க்சிய லெனினியத்தின் மீதும், புரட்சிகர அமைப்புகளின் மீதும், பாட்டாளி வர்க்க இயக்கத்தின் மீதும் பரந்துபட்ட மக்களை நம்பிக்கை இழக்கச் செய்வதே. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது உண்மையில் கட்சியின் தனிநபரின் சர்வாதிகாரம், எல்லாவற்றையும் உற்பத்தி பொருளாதாரம், வர்க்கம் என்று குறுக்கிச் சுருக்கிப் பேசும் வறட்டுத்தனம் என்று முத்திரை குத்தி கொச்சைப்படுத்தி அதை நிராகரிக்கத் தூண்டுவதே.

இந்திய அரசு சாரா நிறுவனங்களின் சித்தாந்த குரு ரஜினி கோத்தாரி, மார்க்சியம் - தொழிலாளி வர்க்க சித்தாந்தம் வழக்கிழந்து விட்டது என்று வாதம் புரிந்த வந்தார். ''உலகத் தொழிலாளி வர்க்கம் ஒன்றுபடுவதற்கு பதில் சர்வதேச நடுத்தர வர்க்கமே தனது விடுதலையைப் பற்றிய உணர்வுகளைக் கொண்டதாக மாறி வருகிறது'' என்று இவர் பிரகடனம் செய்தார்.

இவரும் பிற அரசு சாரா நிறுவன சித்தாந்திகளும் அப்போது வாதிட்டது என்னவென்றால் கம்யூனிசக் கட்சியால் தலைமை தாங்கப்படும் தொழிலாளி வர்க்க இயக்கத்துக்குப் பதிலாக உணர்வூட்டப்பட்ட நடுத்தர வர்க்கத் தொழில்முறைத் தலைவர்களால் கட்சிசாரா அரசியல் நிகழ்ச்சிப் போக்கில் மக்கள் திரள் வழிநடத்தப்படும் இயக்கம் கட்டியெழுப்பப்படவேண்டும் என்பதுதான்.

• • •

''நடவடிக்கைக் குழுக்களை உருவாக்கி, இயக்கும் அடிமட்டக் களப்பணியிலுள்ள அரசுசாரா நிறுவனங்கள், தன்னார்வக் குழுக்கள் வேண்டுமானால் ஊடுருவல், உளவு, சதி, நாசவேலை, மக்கள் இயக்கங்களை சீர்குலைவு செய்வது போன்றவற்றுக்குப் பயன்படுத்தப்படலாம். அத்தகைய அமைப்புகளை அம்பலப்படுத்துவதும் எதிர்ப்பதும் சரிதான்.''

''ஆனால் சி.டி.ஆர்.ஏ., ஐ.எஸ்.ஐ., ஐ.டி.யாஸ், மிட்ஸ், சாமிநாதன், ·பவுண்டேசன் போன்ற ஆவணப் பராமரிப்பு மற்றும் ஆராய்ச்சிக்கான அரை அரசு சார் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள், தன்னார்வக் குழுக்கள், அந்நிய நிதியுதவி பெற்ற பல்கலைக் கழக அரங்கங்கள் அப்படிப்பட்டவை அல்ல. விவரங்களை சேகரிக்கவும் ஆய்வுகளை நடத்தவும் முற்போக்கு இயக்கத்தவரும் பயன்படுத்தலாம்'' என்று அவற்றுடன் தொடர்புடைய பலரும் நியாயம் கற்பிக்கின்றனர்.

களப்பணியில் ஈடுபட்டுள்ள தன்னார்வக்குழுக்கள் நேரடியாக மக்கள் முன் வேலை செய்வதால் இன்றோ

படிப்பகம்

www.padippakam.com

நாளையோ அம்பலப்பட்டுப் போவது சாத்தியம். ஆனால் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் தங்கள் அடையாளம், பணிகளை மறைத்துக் கொண்டு, அரசுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் சேவை செய்பவை, மிகவும் ஆபத்தானவை.

அரசு சாரா தன்னார்வக் குழுக்களின் பணிகளை மதிப்பீடு செய்து கண்காணிப்பது; பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டுப் போக்குகளைப் பற்றிய விவரங்கள் சேகரித்து, ஆய்வு செய்து அறிக்கைகள் சமர்ப்பிப்பது, அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களுக்குத் திட்டப் பணிகளைப் பரிந்துரை செய்வது போன்ற வேலைகளை இந்த ஆராய்ச்சி நிறுவனங்கள் செய்கின்றன.

உதாரணமாக, இந்தியாவிலுள்ள பல ஆயிரக்கணக்கான நெல் மூலக்கூறு (ஜீன்ஸ்)களைக் கடத்திக் கொண்டு போய் ஏகாதிபத்திய பன்னாட்டு விதை, உரம், பூச்சி மருந்து, இரசாயன ஊக்கி உற்பத்தித் தொழில்கள் புரியும் பன்னாட்டு தேசங் கடந்த தொழில் நிறுவனங்களுக்கு விற்பது முதல் நாட்டுப்புற கலை - இலக்கிய மரபுகளைக் கொள்ளையிடுவது வரை சாமிநாதன் ஃபவுண்டேசன் செய்கிறது.

இதேபோல மொழி, மரபுகள், தொற்று நோய்கள் பரவுதல், சிறுவர் - கொத்தடிமை உழைப்பு போன்ற பல ஆராய்ச்சிகளும் ஏகாதிபத்திய பன்னாட்டு தேசங்கடந்த தொழிற்கழகங்களுக்குப் பயன்படுகின்றன. இவையெல்லாம் எப்படி அவற்றின் தொழில்களுக்கும் அரசியல் பொருளாதாரத் திட்டமிடுதலுக்கும், இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் எதிராக எப்படிப் பயன்படுகின்றன என்பது நேரடியாகத் தெரிவதில்லை.

குறிப்பாக, ஏகாதிபத்திய உலகமயமாக்கம், மறுகாலனியாக்கம் என்ற கொள்கையின் கீழ் தாராளமயமாக்கம், தனியார்மயமாக்கம் ஆகிய கட்டுமான மறு சீரமைப்புத் திட்டத்தில் இத்தகைய நிறுவனங்கள் மேலும் புதிய தகுதிகளைப் பெற்றுள்ளன.

கட்டுமான மறுசீரமைப்புத் திட்டங்களால் உலகின் பல நாடுகளில் பஞ்சம் - பசி - பட்டினிச் சாவுகள், ஆலைகள் மூடி வேலை இழப்பு - வேலையில்லாத் திண்டாட்டம் பன்மடங்கு பெருகி பரந்துபட்ட மக்கள் ஆத்திரமும் கோபமும் கொண்டுள்ள இந்தச் சமயத்தில் அவர்கள் போராட்டத்தில் கிளர்ந்தெழுவதை திசை திருப்புவதற்கு அரசு சாரா நிறுவனங்கள் முக்கியக் கருவிகளாகப் பயன்படுகின்றன.

80 நாடுகளின் அரசு சாரா நிறுவனங்களுக்குப் பல ஆயிரம் கோடி நிதியுதவி செய்து, "பசி, உலக வறுமையின் அடிப்படைக் காரணங்கள் குறித்து விவாதங்கள் புரியவும், ஒரு பொதுத்துறை தனியார் வளர்ச்சி உதவித் திட்டத்துக்கான தொகுதியை விரிவுபடுத்தவும், உறுதியூட்டவும், இந்த வளர்ச்சித் திட்டக் கல்வியில் ஈடுபடும் நிறுவனங்களின் வலைப் பின்னலை வளர்க்கவும் அமெரிக்க சர்வதேச வளர்ச்சிக்கான நிறுவனம் பணியாற்றியது. (வளர்ச்சிக்கான வழிகாட்டும் கல்வித்திட்ட உதவிகள், 1987 பொருளியல் ஆண்டு அறிக்கை)




'களப் பணியில்' செயல்பட்டு வரும் தன்னார்வக் குழுக்களுக்கு 'ஆய்வுப் பணியில்' தங்களை விற்றுக்கொள்ளும் ஆய்வாளர்கள். ஏகாதிபத்தியத்தின் செல்லக் குழந்தைகள்.

கட்டுமான மறு சீரமைப்புத் திட்டத்தில் அரசுகளின் பங்கு - பத்திரங்களை வெட்டிவிட்டு அதற்கு மாற்றாக "சமூகப் பங்கேற்பு" "அடிமட்டத் திட்டமிடுதல்" "வளர்ச்சியில் பங்குதாரர்கள்" என்ற பெயரில் அரசு சாரா நிறுவனங்கள் ஈடுபடுகின்றன. சமூக நலப்பணிகளுக்கு இனியும் அரசு அதிகாரபூர்வ சட்டபூர்வ அமைப்புகள் பொறுப்பல்ல; அவை மக்களின் சொந்தப் பொறுப்புதான் என சுமையை - பழியை மக்கள் மீதே மாற்றுவதுதான் இதன் நோக்கம்.

அவை மாற்றுப் பொருளாதாரத் திட்ட உருவரைகள் - வரவு செலவுத் திட்டங்கள், மாற்றுப் பொருளாதார உச்சி மாநாடுகள் நடத்துகின்றன. ஐ.எம்.எஃப் - உலக வங்கி ஆகியவை இணைந்து நடத்தும் ஆண்டுக் கூட்டங்களுக்குப் "போட்டி"க் கூட்டங்கள் நடத்துகின்றன. சூழலுக்குத் தகுந்த பாரிய மதிப்புகளின் அடிப்படையிலான மாற்றுப் பொருளாதார வளர்ச்சி தொடர்ந்து நீடித்து நிற்கும் வாய்ப்புடைய வளர்ச்சி திட்டங்கள் மூலம் கட்டுமான மறுசீரமைப்பு, உலகமயமாக்குதலை எதிர்ப்பதாக நாடகமாடுகின்றன.

ஆனால் இந்த அரசு சாரா நிறுவனங்கள் இயங்குவதற்கே கூட அதே ஏகாதிபத்திய நிறுவனங்கள் தாம் நிதியுதவி செய்கின்றன. அதனால்தான், இந்த அரசு சாரா நிறுவனங்கள் இயங்கும் எல்லா நாடுகளிலும் அரசியல் - பொருளாதார நெருக்கடிகள் மேலும் மேலும் முற்றி மீள முடியாத கட்டத்தை எட்டிய போதும், இந்த நாடுகளில் அரசியல் வாழ்வில் பண்பாட்டுச் சீரழிவும், கிரிமினல் மயமாவதும், இலஞ்ச ஊழலும் தலைவிரித்தாடிய போதும், அந்தந்த நாட்டு அரசுகளைத் தகர்ப்பது, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது பற்றி இந்த அரசு சாரா நிறுவனங்கள் தப்பித் தவறி மேலெழுந்த வாரியாகக் கூட மூச்சு விடுவதே கிடையாது.

"மதபோதனையோ, மத மாற்றமோ கண்காணிப்பும் கிடையாது. ஏராளமான ஆய்வு வசதிகளும், நிதியும் கணிசமான ஆள்பலமும் உள்ள அரசு சாரா - தன்னார்வக் குழுக்களை ஏன் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. திறந்த மனதுடன் இருக்கும் தங்களிடம் ஒரு உரையாடலை "ஏன் நடத்தக்கூடாது" என்று புரட்சிகர சக்திகளுக்கு இந்தக் குழுக்கள் தூண்டில் வீசுகின்றன. நடுத்தரவர்க்க ஊசலாட்டநபர்கள் ஓடிப் போய் அந்தத் தூண்டிலைக் கவ்விக் கொள்கின்றனர்.

புரட்சிகர அறிவுஜீவிகளைக் கூட நிரந்தர உரையாடலில் நிறுத்தி வைப்பது தான் அக்குழுக்களின் நோக்கம். புரட்சியின் மீதும் கட்சியின் மீதும் ஐயவாதத்தை விதைத்து செயலிழக்க வைப்பது தான் அவற்றின் இலக்கு.

இறுதியாக, அவை அரசு சாரா நிறுவனங்கள் என்று தான் சொல்லிக் கொள்கின்றனவே தவிர அரசு எதிர்ப்பு நிறுவனங்கள் அல்ல என்கிற ஒரு உண்மையே போதும், - அவை மண் குதிரைகள் தாம் என்பதைப் புரிந்து கொள்வதற்கு!

■ சாத்தன்

### சுய விமரிசனம்

சென்ற இதழில் (ஜூன் '97) 'விலிம்பு நிலைக் கோட்பாடும் மைக்கேல் ஜாக்சனின் கலகமும்' என்ற கட்டுரையில் மைக்கேல் ஜாக்சனே சுற்றுச்சூழல் பற்றிய பாடல்களைப் பாடும் முற்போக்குத் தன்மையுடையவர்தானே என்று புரட்சிக் கவிஞர் இன்குலாப் வரவேற்றுள்ளார்..." என்று கட்டுரையாளர் எழுதியிருந்தார். தான் அவ்வாறு பொருள்பட பேசவில்லை என்று இன்குலாப் மறுத்துள்ளதாக அறிகிறோம். தனிப்பட்ட உரையாடலில் அவர் பேசியதைக் கேள்விப்பட்டு அவர் இன்ன பொருளில் பேசியிருப்பார் என்று ஊகம் செய்து கட்டுரையாளர் எழுதினார். அவ்வாறு ஊகம் செய்ததும், விமரிசனம் செய்ததும் தவறு என சுய விமரிசனம் ஏற்கிறோம்.

- ஆசிரியர் குழு.

www.padippakam.com

# திருவரங்கத்தில் விடையாற்றியும் திருவையாற்றில் அசுரவியூகமும்



யுகயுகமாய்த் தொடரும் தேவாசுரப் போரின்
புதிய அத்தியாயம் எழுதப்பட்டது திருவரங்கத்தில்

தேவாசுரப் போரில் அசுரர் பங்கையும்
தேவருக்குத் தாரை வார்த்த அசதியில்
பள்ளி கொண்டிருந்த
அரங்க நாதன் அறிதுயில் கலைய
ரங்கேறியது திருப்பள்ளி எழுச்சி

மூலவர் கருவறை வழிமறைக்கும்
நந்தீஸ்வர இந்து முன்னணி
ஊர்வலத்திற்கு மட்டுமில்லை
ஸ்ரீரங்கத்தில் அவாளின்
உத்திரை வீதியும் சித்திரை வீதியும் தாண்டி
உற்சவ மூர்த்திகளையே
உலா விட மறுத்தன சூத்திர வீதிகள்

அன்றுதான் முதன்முதலாக அங்கே
பார்ப்பானும் பகவானும் சண்டாளன் ஆயினர்
பஞ்சமனும் சூத்திரனும் பெண்டுகளும்
பள்ளிகொண்டானைத் தொட்டுத் துயிலெழுப்பி
பள்ளி எழுச்சி பாடினர்
பிறவிப் பயனை எய்தியே விட்டனன்
'பிறவா யாக்கை'ப் பெம்மான் தானும்.

பட்டாசு கொளுத்தி மிட்டாய் கொடுத்து
பூசுர அகம்பாவ துவம்சம் செய்த
அசுர தீபாவளி ஆரம்ப மானது

காலகால நூல்வேலி கிழித்தே
கருவறை நுழைந்தது செம்பதாகை
அம்பேத்காரும் பெரியாரும்
ஆங்கெழுந் தருளினர்

ராமஜென்ம பூமியென அனுமார்கள்
கொடியேற்றிய கரசேவைக்கு
அம்பேத்கர் பிறந்த மண்ணின்
பெரியார் பூமியின்
விடையாற்றி இது.

• • •

அடுத்த அத்தியாயம் அசுர கானமாய்
ஆரம்ப மானது தஞ்சை மண்ணில்..

மூப்பனார்கள் தோப்பனார்
முப்பாட்டனார் காலந் தொட்டே வழிவழியாய்க்

''கோத்திரஞ் சொல்லு - உன்
கோத்திரத்தின் சூத்திரம் சொல்''லெனச்
சொல்லச் சொல்லியே சூத்திரர் நுழையாமல்
அவாளை மாத்திரமே அனுமதித்த
உஞ்சி விருத்திப் பரம்பரை ஆதிக்கப்
பஞ்ச நதீஸ்வர பரிபாலன ஐயாற்றில்
அரங்கேறியது ஓர் அசுர வியூகம்

தியாகப் பிரம்ம ஆராதனையில்
பஞ்சரத்தினக் கீர்த்தனை
மங்களம் பாடுமுன்
திக்குகளெல்லாம் திக்குமுக்காட
ஊடறுத் தொலித்தது ஒயிலாட்ட விசில் விசில்



அபயகரமருளும் உபயதாரர்
மூப்பனார்ஜீயின் முகமெலாம் வேர்க்க
தூரதர்சனின் கேமரா ஆங்கிள்கள்
தாறுமாறாய்ப் புறம்புறம் திரிய
அரங்கத்தில் விரிந்தன செம்பதாகைகள்

சங்கு சக்கரங் கதிகலங்கிடச்
சனாதனத்தின் குலைநடுங்கிட
கங்கை வார்குழல் 'திங்குதிங்'கெனச்
சைவாதீனம் பதைபதைத்திட
அசுர கானம் முழங்குகின்றது
அசுர வித்துகள் முளைவிட் டெழுந்தன.

''அபச்சாரம் அபச்சாரம்
அபஸ்வரம் அபஸ்வரம்
ஆபத்து ஆபத்''தெனப்
பறைகேட் டதிர்ந்த
பூசுர அசுணங்கள் புலம்பலாயின

ஆர்ப்பாட்டத்தின் போர்ப்பரணியை
ஐயாற்றின் வீதிகளில் மட்டுமில்லை
ஐயாறப்பன் செவிப்பறையினிலும்
அறைந்தறைந்ததிர்ந்தது பறை

www.padippakam.com



அவனுக்கு மட்டும் இல்லையா ஆசை?
ஏழிசையாய் இசைப்பயனாய்
நின்றவனன்றோ அவ்வீசன்!
எந்நாட்டவர்க்கும் இறைவனே எனினும்
எத்தனை நாளாய் அதையே கேட்க
'இராம நீ சமானம் எவ'ரென மட்டும்?
தஞ்சையில் கேட்ட தமிழிசை அமுதை,
'பண்ணாய்ந்த சுந்தரேசன்'
பண்தோய்ந்த செந்தமிழை
மீண்டும் மீண்டும்
ஐயாற்றிலும் கேட்க அவனுக்கும் ஆசை



தண்டபாணித் தேசிகர் பாடிய
தமிழிசை மேடையை
அசுரகானம் புகுந்த மாசென
ஸ்ரீரங்கக் கருவறையைத்
தீட்டுக்கழித்த திமிர்த்தனமும்
தேவாதிதேவப் பழியுந் துடைத்தே
மீட்டுக் கொடுத்தது அசுரகானமே

ஐயாறப்பனும் அரங்கநாதனும்
கட்டுண்டு கிடந்தனர்
ஏழிசைச் சூழலில்...

"அலமந்து சிலமந்தி
மதிலேறி முகம்பார்க்கும் திருவை யாறே!"

டுமை நெடுங்காலமெலாம் ஆரியத்தின் கையால்
நெஞ்சொடிக்கப்பட்ட கதை மாறி நடந்தேறும்...
தெழுந்த புதுப்பாட்டாய்ப் பொய்யழிந்த செய்தி
ப்பண்ணின் இசையோடு யாழ்நரம்பில் ஓடும்".

★ பொதிகைச் சித்தர்

# கவிதை

கவிதை பற்றிய
கணிப்புகள் வெவ்வேறானவை.

சிலருக்குச் சிறகுகள்
புரியவில்லை இவர்களுக்கு;
பூமியோடு ஒட்டிய
பாதங்களே தேவை.



சிலருக்கு
கர்வமுள்ள திறமை;
அறிவதில்லை அவர்கள்
ஏர் பிடிப்பவனிடமும்
எழுதா இலக்கியமுண்டு.

காலந்தோறும்
கவிதைகளால் வருடியதில்
பலரின் கண்களில்
மயக்க நதி.

கற்பனைகளால் தடவியதில்
வாழ்க்கையின்
மறுபெயர் 'விதி'.

வாழ்த்துப் பாக்களால்
போற்றுதல்களால்
மழுங்கிப் போயின சொற்கள்.

கவிதையை
அணுக்களோடு ஒப்பிடலாம்;
ஆக்குவதிலும்
அழிப்பதிலும்
அதன் திறனப்படி.

வேர்களின்
பலமறியாதவர்கள்
பூக்களே போதுமென்று
புன்னகைக்கிறார்கள்.

இஃது கனிமரம்.
தீக்குச்சி உரசிதான்
பற்றவைக்க வேண்டுமென்பதில்லை.

பசியும் ணியும்
பழகியவனுக்கு கவிதை
ஆயுதம்.

• தீபன்

படிப்பகம்

www.padippakam.com

அட்டைப்படக் கட்டுரை:

# எச்சரிக்கை!

# எய்ட்ஸ் வியாபாரிகள்

ஐம்பதாம் ஆண்டு சுதந்திரத்தின்(?) பொன் விழாவைக் கொண்டாடும் ஆட்சியாளர்கள் நாடெங்கும் 'தேசபக்தி' பிரச்சாரம் செய்கிறார்களோ இல்லையோ, எய்ட்ஸ் பிரச்சாரத்தில் இறங்கியிருக்கிறார்கள்.

இருபத்தியோராம் நூற்றாண்டை நோக்கி மக்களை இழுத்துப் போக இருபத்தியோரு சானல்களை திறந்து தனியார்மயமாக்கம், உலகமயமாக்கம் என்று ஆரம்பித்தபோது, எதிர்த்து விமர்சித்தவர்களைப் பார்த்து, ''உலக நாடுகளோடு போட்டி போட்டு முன்னேற இதெல்லாம் அவசியம். சும்மா குறைசொல்வதை விட்டு பாசிட்டிவ்வான விசயத்தைப் பாருங்கள்'', என்று அறிவுரை கூறினார்கள் அமைச்சர் பெருமக்கள். இவர்கள் தீட்டிய திட்டங்களினால் ஏழை, எளிய மக்களுக்கு என்னடா பாசிட்டிவ்வான சங்கதி என்று எட்டிப் பார்த்தால், நாடு முழுக்க ஒரே எச்.ஐ.வி. பாசிட்டிவ் ஆக இருக்கிறது.

''லாரி வாகன தொழிலாளர்கள் தான் அதிகம்; இல்லை நடுத்தர வர்க்க ஆசாமிகளின் எண்ணிக்கையும் அதிகம்; பெண்கள், குழந்தைகள் தப்பவில்லை என்று மக்களிடம் சதவிகித கணக்கைக் காட்டிவிட்டு, எய்ட்ஸின் சமூக தோற்றுவாய்க்கு காரணமான அரசும், ஆளும் வர்க்கமும் தப்பித்துக் கொள்கிறது.

எந்தவொரு சமூக சீரழிவும் அரசாங்கத்தின், அதிகார வர்க்கத்தின் துணையின்றி நடப்பதில்லை என்பது நாடே அறிந்த சங்கதி. சாராயம், சூதாட்டம், சுரண்டல் லாட்டரி, ஆபாச சினிமா, ஆபாச புத்தகம், விபச்சாரம் என ஒவ்வொன்றையும் மெல்லமெல்ல அறிமுகப்படுத்தி தொழிலாக்குவது, பின்பு அது சமுதாயத்தில் பாதிப்பை ஏற்படுத்தி பிரச்சினைகள் கிளம்பியவுடன் ''இனி என்ன செய்வது? சாராயத்தை ஒழிக்க முடியுமா? விபச்சாரத்தைத் தடுக்க முடியுமா? ஜனங்கதான் இதுக்கெல்லாம் போகாம இருக்கணும்; அவங்கதான் விரும்புறாங்க'', என்று பழியை மக்கள் மீதே போட்டு, மேற்பூச்சு நடவடிக்கைகள் எடுப்பதுதான் அரசாங்கத்தின் வாடிக்கை.

சிகரெட் பெட்டியில், ''புகை உடல்நலத்திற்கு தீங்கு'' என்று எழுதி வியாபாரம் செய்வதுபோல, மதுப் புட்டியில் ''குடும்பத்தைக் கெடுக்கும்'' என்று எழுதி வியாபாரம் செய்வது போல ''எய்ட்ஸை தடுக்க நிரோத்



16 வயது நூடன், தனது 14 மாதக் குழந்தையுடன். தாயும், சேயும் எய்ட்ஸ் நோயாளிகளாக - உதவும் கரங்களின் கருணாலயத்தில்.

உபயோகியுங்கள்'' என்று எய்ட்ஸ் வியாபாரம் செய்து கொண்டிருக்கின்றன அரசும், தன்னார்வ அமைப்புகளும். ஒழுக்கம், அன்பு, அகிம்சை என்ற பாதையில் தொடர்ந்து முன்னேறிய 'கதர் வியாபாரிகள்' இவ்வளவு சீக்கிரம் நிரோத் வியாபாரிகளாக வளர்ந்திருக்கிறார்கள் என்றால், எல்லாம் புதிய பொருளாதாரக் கொள்கையின் மகிமைதான்.

அன்னிய மூலதனத்தைப் புகுத்தி விவசாயம், கைத்தொழில், சிறு தொழில்களை நசுக்கி நாசமாக்கி ஆயிரக்கணக்கான மக்களை குடும்பம் குடும்பமாக விபச்சாரத்தில் ஈடுபடுமளவுக்கு வாழ்க்கையை சீரழித்தது யார்? இதற்குக் காரணமான இந்த அரசாங்கமும், அதிகார கும்பலுக்கும் ''எய்ட்ஸை'' பற்றி விழிப்புணர்வூட்ட எந்த அருகதையும் கிடையாது என்பது ஒருபுறமிருக்க இவர்களின் அணுகுமுறையே எய்ட்ஸை ஒழிக்கப் போவதில்லை என கட்டியம் கூறுகிறது.

எய்ட்ஸை ஒழிப்பதைவிட ஆணுறை விற்பதிலேயே அரசாங்கம் குறியாய் இருக்கிறது. இது மிகையில்லை, வக்கிர சிந்தனைகளை வாரி வழங்க வகைவகையான சானல்கள், ஆபாச திரைப்படக் காட்சிகள், நட்புத் தொலைபேசி என்ற பெயரில் பேச்சு விபச்சாரம், பாலியல் சுற்றுலா (Sex tourism) என்று அனைத்தையும் கட்டவிழ்த்து விட்டுக் கொண்டே மக்களிடம் ''மனக் கட்டுப்பாடு அவசியம்'' என்று இரட்டை வேடம் போடும் இந்த அயோக்கியத்தனத்தை ஒழிப்பதல்லவா முதல் அவசியம்.

சமீபத்தில் மகாபலிபுரத்தில் சிறுவர்கள் விபச்சாரம் பற்றி செய்தி வெளியே வந்தபோது இந்திய சுற்றுலாத் துறை, மற்றும் காவல் துறை அதிகாரிகள் அரசாங்கத்தின் மனச்சாட்சியைத் தொட்டு உதிர்த்த வாக்குமூலம் இது, ''வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்தால், அவர்களின் வருகையே நின்றுபோகும். சுற்றுலா வளர்ச்சியைப் பாதிக்கும். ஆகையால் குற்றவாளிகளை கடுமையாக ஏதும் செய்ய முடியாது''.

பார்த்தீர்களா?! எவன் எக்கேடு கெட்டால் எங்களுக்கென்ன கல்லா பெட்டிக்கு காசு வந்தால் போதும் என்று அரசியல் விபச்சாரம் செய்யும் இந்த ஆளும்வர்க்க கும்பலா எய்ட்ஸை ஒழிக்கப் போகிறது?!

*சிகரெட் பெட்டியில், ''புகை உடல்நலத்திற்கு தீங்கு'' என்று எழுதி வியாபாரம் செய்வதுபோல, மதுப்புட்டியில் ''குடும்பத்தைக் கெடுக்கும்'' என்று எழுதி வியாபாரம் செய்வதுபோல ''எய்ட்ஸை தடுக்க நிரோத் உபயோகியுங்கள்'' என்று எய்ட்ஸ் வியாபாரம் செய்து கொண்டிருக்கின்றன அரசும், தன்னார்வ அமைப்புகளும்.*

www.padippakam.com

இந்திய கலாச்சாரம், புனிதம் என பொய்த்திரைகள் களைந்து கூட்டாளி நிர்வாணப்பட்டு நிற்கும் போது பங்காளி பார்த்துக் கொண்டிருப்பானா? எய்ட்ஸின் பிதாமகன் அமெரிக்கா (USAID) உடுக்கை இழந்த இந்தியாவுக்கு உதவிக்கரம் நீட்டியுள்ளது.









ஒழுக்கத்தை போதித்தும், அன்பாகவும், மிரட்டியும் அணிவகுக்கும் எய்ட்ஸ் விளம்பரங்கள் - ''ஒருத்திக்கு ஒருவன்தான் பாரு, ஒருவனுக்கு ஒருத்திதான் கேளு, ஒருவேளை ஒழுக்கம் கெட்டால் ஆணுறை ஒன்றைப் போடு'' - எய்ட்ஸ் பிரச்சார ஒலிப்பேழையின் பாடல் வரிகள்.

குறிப்பாக தமிழ் நாட்டில் வி.எச்.எஸ். (வாலண்டரி ஹெல்த் சர்வீஸஸ்) என்ற தன்னார்வ அமைப்பிற்கு 36 கோடி ரூபாய் நிதி உதவி அளித்து எய்ட்ஸ் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி பணிகளுக்கு ஆள் அமர்த்தியுள்ளது. யாரால் எய்ட்ஸ் தோன்றியதோ, அவனே இங்குவந்து யார், யாருக்கு 'எய்ட்ஸ்' இருக்கிறது என்று அக்கரையாய் ஆராய்ச்சி செய்யும்போது, எதிர்க்கத் தோன்றுமா? இந்தியாவின் அயலுறவு கொள்கை முதல் உடல் உறவு கொள்கை வரை ஆராய்வதற்கு அமெரிக்காவுக்கு இல்லாத உரிமையா?

அதாவது விபச்சாரம் என்பது கேவலமில்லையாம், விபச்சாரி என அழைப்பதுதான் பாவமாம். ஆனால் பாலியல் தொழிலாளர் (Sex - worker) என பக்குவமாக அழைக்கச் சொல்கிறது. இந்த அறிவாளிகளின் அகராதிப்படி இனி திருடனை திருடன் என்று அழைக்கக் கூடாது, களவுத் தொழிலாளி என கவுரவமாக அழைக்க வேண்டும்.

புதுப் பட்ஜெட் தயாரித்து ப. சிதம்பரம் சொன்னதுபோல, இனி கறுப்புப் பணத்தை ஒழிக்க முடியாது, அப்படியே வெளுப்பாக்கி கொள்ளலாம் என்றார். அதன்படி விபச்சாரத்தை ஒழிக்க முடியாது, எனவே அதையும் ஒரு வாழ்க்கை முறையாக ஆக்கிக் கொள்ளலாம் என்று எந்தச் சீரழிவையுமே ஒழிப்பதற்குப் பதில், அதை ஒரு தொழிலாக ஆக்குவதிலேயே தன்முனைப்பைக் காட்டுகிறது அரசாங்கம்.

எய்ட்ஸ், ஊழல் எதுவானாலும் ''பாதுகாப்பாக விளையாடுங்கள்'' என்பதையே பண்பாடாக உருவாக்குகிறது அரசு. இதற்கான வேலைகளையும் மும்முரமாக நடத்துகிறது.

மைல் கணக்கில் நடந்துபோய், மணிக்கணக்கில் காத்திருந்து ரேஷன் அரிசி வாங்கிவரும் சிரமத்திற்கு மாற்று ஏற்பாட்டிற்கு வழி செய்யாத அரசு, கைக்கெட்டும் தூரத்தில் ஆணுறைகளை அள்ளிக் குவிக்கிறது.



அடங்க மறுக்கும் கண்ணீரின் வழியே கடந்தகாலத்தின் அவலம். உதவும் கரங்களின் கருணாலயத்தில் நாட்களை எண்ணும் புஷ்பா - எய்ட்ஸ் நோயாளி.

இவர்களின் 'எய்ட்ஸ் கட்டுப்பாட்டை' நிரோத் அட்டை கவர்ச்சியே எடுத்தெறியும் அளவுக்கு, தொழில் சூடு பிடித்துள்ளது. பிரபலங்களின் டி.வி. விளம்பரம் முதல், விலாசம் எழுதப்படாத (இன்லேண்ட்) உள்நாட்டு காகிதம் வரை எய்ட்ஸ் எச்சரிக்கையுடன், நிரோத் விளம்பரம் இளைய பாரதத்திற்கு வழிகாட்டுகிறது. தனித்தனி ஊசி, இலவச பரிசோதனை, இன்னும் ஒருபடி மேலேபோய் வரலாற்றில் பதிக்குமளவுக்கு சாலையோரங்களில் மரங்களை நட்ட பெருமை அசோகருக்கென்றால்; ஆணுறை தானியங்கி நட்ட பெருமை கருணாநிதிக்கு எனுமளவுக்கு அப்படியொரு கட்டுமான வேலை நாடெங்கும் நடக்கிறது.

பாவம் இதையெல்லாம் கண்ணாரக் காண ஒருவனுக்குக் கொடுத்து வைக்கவில்லை. ஆசையாய் அறிமுகப்படுத்திய ஐந்து நட்சத்திர கலாச்சாரம், இவ்வளவு சீக்கிரமாய் எச்.ஐ.வி. பாசிட்டிவாக மலரும் என்று தெரிந்திருந்தால், போயும் போயும் போபர்ஸ் பீரங்கியில் பெயரைக் கெடுத்துக் கொண்ட ராஜீவ் காந்தி தேச பாதுகாப்புக்காக ஒரு ஆணுறை கம்பெனி ஒப்பந்தத்திலேயே பணத்தை கமுக்கமாக அள்ளியிருக்கலாம். அந்த அளவிற்கு எய்ட்ஸை ஒழிப்பதற்கான அடிப்படையை மாற்றாமல், நோய்க்கு உறை தைத்துக் கொண்டிருக்கிறார்கள் அரசியல் வியாபாரிகள்.

இதில் பத்திரிகையில் வாளிப்பான உடலையும், எலும்பு துருத்திய உடலையும் பக்கம் பக்கமாக போட்டு, இப்படி இருந்தவனை, இப்படி ஆக்கிவிட்டது ''எய்ட்ஸ்'' என்ற விளம்பரம் வேறு; ஆபத்தைத் தடுக்க ஆட்சியாளர்களுக்கு தெரிந்த ஒரே வழி ''எய்ட்ஸிற்கு நிரோத்; இந்தியாவிற்கு காந்தியம்''.

எலும்பும் தோலுமாக இருக்கும் தொழிலாளி; எப்பவுமே எலும்பு துருத்தி இருப்பதற்கு யார் காரணம்? எய்ட்ஸா? அரசா? நமக்குத் தெரியும் எய்ட்ஸை வியாபாரம் செய்யும் அரசும், அதிகார வர்க்கமுமே அனைத்து சீரழிவுகளுக்கும் காரணம்; இனியும் நம்முடைய இரத்தத்தை பரிசோதித்துக் கொண்டிருப்பதில் பலனில்லை; இந்திய ஆளும் வர்க்கத்தை ஒரு இரத்த பரிசோதனைக்கு உட்படுத்தாமல் எய்ட்ஸ் உள்ளிட்ட எதற்கும் தீர்வில்லை.

இந்தியக் கலாச்சாரம், புனிதம் என பொய்த்திரைகள் களைந்து கூட்டாளி நிர்வாணப்பட்டு நிற்கும்போது பங்காளி பார்த்துக் கொண்டிருப்பானா? எய்ட்ஸின் பிதாமகன் அமெரிக்கா (USAID) உடுக்கை இழந்த இந்தியாவுக்கு உதவிக் கரம் நீட்டியுள்ளது.

■ சித்தன்

படிப்பகம்

# கட்டுடைத்தால் கலங்கும் பின் நவீனத்துவம்

சென்ற இதழில் வெளியான 'விளிம்பு நிலைக் கோட்பாடும் மைக்கேல் ஜாக்சனின் கலகமும்' என்ற கட்டுரையில் அறிஞர் அ. மார்க்ஸ் அவர்களை அந்தோணிசாமி மார்க்ஸ் என்று குறிப்பிட்டு கட்டுரையாளர் எழுதியிருந்தார். இவ்வாறு எழுதியது ஒரு அ-நாகரீகமான தாக்குதல் என்று சிலர் குறைப்பட்டுக் கொண்டனர். அவர் பிறப்பால் கிறித்தவர் என்பதை 'தீய உள்நோக்கத்துடன்' அம்பலப்படுத்தும் விசமத்தனமான முயற்சி இது என்று சிலர் பொருமியதாகவும் அறிகிறோம்.

அறியப்பட்ட மார்க்சுக்கும் (அதாவது கார்ல் மார்க்சுக்கும்) அறிஞர் அ. மார்க்சுக்கும் எவ்விதக் கொள்கைத் தொடர்பும் இல்லை என்பதுடன், மார்க்சியத்திற்கு எதிரானவர்தான் அ. மார்க்ஸ் என்பதை வாசகர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியிருந்தது. மேலும் அதிகாரபூர்வ அறிஞர்களின் முழுப் பெயரையும் (ஐ.கே. குஜ்ராலை இந்தர் குமார் குஜ்ரால் என்று) குறிப்பிடுவதொன்றும் அதிசயமில்லை.

வரலாற்றை மறுவாசிப்பு செய்வது, மொழியின் அதிகாரத்தை கட்டுடைப்பது... போன்ற தீவிரமான செயல்களில் ஈடுபட்டிருக்கும் நிறப்பிரிகை அறிஞர்கள் கேவலம் ஒரு சொல்லை - சரியாகச் சொன்னால் ஒரு எழுத்தை கட்டுடைத்ததற்காக பதறுவது வேடிக்கை! வார்த்தையையும் - வாழ்க்கையையும், வேடிக்கையாகவும் - விளையாட்டாகவும் பார்க்க வேண்டும் என கற்றுக் கொடுக்கும் பின் நவீனத்துவ அறிஞர்கள் ஒரு எழுத்து குறித்த பிரச்சனையை தமிழ் சினிமாவின் 'தாலி சென்டிமென்ட்' தரத்திற்கு கொண்டு வந்து விட்டார்கள்.

''அ. மார்க்சை புதிய கலாச்சாரத்தில் மோசமாகத் தாக்கியிருக்கிறார்களாமே'', என்ற வதந்தியைக் கேட்ட மாத்திரத்தில் நம்புவதற்குத் தயாராக இருந்த சிலர், 'எவ்வளவு மோசமாகத் தாக்கியிருக்கிறார்கள்' என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவாவது அந்தக் கட்டுரையை வாசித்திருக்கலாம், அல்லது மறுவாசிப்பு செய்திருக்கலாம்.

அதிகாரத்துவம், ஒற்றைப் பரிமாணக் கருத்துருவாக்கம் ஆகியவற்றுக்கு எதிராகக் கலகக் கொடி பிடிப்பதாகச் சொல்லிக் கொள்பவர்கள் தங்களைப் பற்றிய விமர்சனம் என்றவுடனே பன்முக வாசிப்புக்கு ஆப்பறைந்துவிட்டு ஒற்றைப் பரிமாண உலக்கையுடன் களத்தில் இறங்கி விட்டார்கள்.

''கருத்துக்களும், மாற்றுக் கருத்துக்களும் எவ்வளவு கடுமையாக வேண்டுமானாலும் மோதலாம். ஆனால் அத்தகைய கருத்துப் போராட்டம் தனிநபர் உறவுகளை குலைத்து விடும் அளவுக்கு 'தரம் தாழ்ந்துவிடக் கூடாது'.'' என்பது அறிவுலக ஆத்திச்சூடி.

'தரப்படுத்துதல்' என்ற பேச்சே பெருங்கதையாடல் என்பது ஒருபுறமிருக்க, இந்த ஆத்திச்சூடி - கொன்றை வேந்தனில் எல்லாம் நமக்கு நம்பிக்கை கிடையாது என்பதுதான் பிரச்சினை.

எதிர்க் கலாச்சாரம் என்று அ. மார்க்ஸால் முன்வைக்கப்படும் விழுமியங்கள், ஆளும் வர்க்க விழுமியங்களே என்பது தான் அக்கட்டுரையின் மையக் கருத்து. எதிரியின் கலாச்சாரத்தை - கருத்தை, பிரச்சாரம் செய்யும் ஒரு தனிநபருடன் கருத்துப் போராட்டம் நடத்தும்போது, உணர்ச்சிக் கலப்பற்ற சுத்திகரிக்கப்பட்ட கணித மொழியை பயன்படுத்த முடியாது. எங்களால் முடியாது என்பது மட்டுமல்ல, தான் நம்புகின்ற கொள்கையை தனது வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த முயலும் எந்த ஒரு நாணயமான மனிதனாலும் முடியாது.




பேச்சுக்களை கருத்தரங்க மேடையில் இருந்து எழுப்பப்படும் ஒலிக் கோவையாகவும், எழுத்துக்களை காகிதத்தை ஈரப்படுத்தும் வண்ணமாகவும் மட்டுமே மதிப்பவர்கள்தான் கொள்கைக்கும், வாழ்க்கைக்கும் உள்ள உறவுகள் மற்றும் முரண்பாடுகள் குறித்து மவுனம் சாதிக்க முடியும்.

மேற்கூறிய 'குற்றம் சாட்டப்பட்ட' கட்டுரையில் தனிநபர் தாக்குதல்கள் ஏதுமில்லை என்பது ஒருபுறமிருக்கட்டும். 'எதிர்க் கலாச்சாரத்தை' இவர்கள் வாழ்க்கையில் எப்படி அமல்படுத்துகிறார்கள் என்று யாரும் கேள்வி எழுப்பக் கூடாதா? இது தனிநபர் தாக்குதலா? அனைத்து அதிகாரமும் (முக்கியமாக கம்யூனிஸ்டுகளின் சர்வாதிகாரம்) ஒழிக என்று கருத்தரங்க அறைகளின் கூரைகள் நடுங்க போர்ப்பிரகடனம் எழுப்பும் இவர்கள் அந்த யுத்தத்தை தங்கள் அன்றாட வாழ்க்கையில் எப்படி நடத்துகிறார்கள் என்பதை யாரும் அறியக் கூடாதா?

மையத்தைத் தகர்க்க விளிம்பைத் திரட்டுவதாக முழங்கிவரும் இவர்களுடைய வாழ்க்கை மையத்திலிருந்து விளிம்பை நோக்கி நகர்கிறதா? அல்லது குவிமையத்தை நோக்கி தப்பித்து ஓடுகிறதா?

ஒரு ஊழியர் என்ற முறையில் நிறுவனத்தை எதிர்த்து நிகழ்த்தும் கலகம், ஒரு வர்த்தகர் என்ற முறையில் சந்தையின் ஏகபோக அதிகாரத்திற்கு எதிராக நடத்தும் கலகம் - ஆகியவற்றின் அனுபவங்களை அறியத் தருவது, அய்ரோப்பிய ஆட்டோநாம்களின் அனுபவத்தை அறியத் தருவதைவிடப் பயனுள்ளதல்லவா?

கொள்கைக்கும், நடைமுறைக்கும் இடையிலான முரண்பாட்டைக் களைய விரும்புபவர்கள் இத்தகைய விமர்சனம், குறித்து அஞ்சுவதில்லை. உண்மையான பின் நவீனத்துவ வாதிகளும் அஞ்சத் தேவையில்லை. ''கொள்கையாவது - வெங்காயமாவது, நடைமுறையாவது - உருளைக் கிழங்காவது!, நான் ஸ்டார் ஹோட்டலில் ஆடிக் கொண்டுதான் 'தலித்தியம்' பேசுவேன்'' என்று மட்டையடியாக அடித்து விடலாமே!

அந்த வகையில், உண்மை, நேர்மை, ஒழுக்கம் போன்ற பெருங்கதையாடல்களை தீர்க்கமாக நிராகரித்தவர்தான் தளபதி ரவிக்குமார். 'தலித் என்ற தனித்துவம்' என்ற நூலுக்கு அவர் எழுதியுள்ள முன்னுரை அதற்குச் சான்று கூறுகிறது:

- ...''ஆந்திராவில் மக்கள் யுத்தக் குழுவின் சமீப கால செயல்பாடுகள் தலித் பிரச்சனைக்கு எதிரான நிலையை நோக்கி அது நகர்வதாகவே தோற்றம் தருகின்றன.... ம.யு. குழுவின் செல்வாக்கில் உள்ள ஒரு கிராமத்தில் ஒரு பிற்படுத்தப்பட்ட சாதிப் பெண்ணை தலித் இளைஞன் காதலித்ததற்காக அவனை ம.யு. கொரில்லா குழு சுட்டுக் கொன்றுவிட்டதாக.... அந்த இளைஞனின் பெற்றோர் மகஜர் அளித்தனர் என்று புதுவை மாநில பி.யு.சி.எல். செயலர் தெரிவித்தார்.''
- ...''அம்பேத்கர் நூற்றாண்டையொட்டி அம்பேத்கர், பெரியார் பெயர்களை அடிக்கடி உச்சரித்து, ஆலய நுழைவுப் போராட்டம் நடத்தி பரபரப்பு உண்டாக்கிய 'புதிய கலாச்சாரம்' குழுவினர் இன்று விளிம்பு நிலை மக்கள் கலாச்சாரம் என்பதை விமர்சிப்பதான பெயரில், காழ்ப்பினை கக்குகின்றனர்.''
- ...''புதிய கலாச்சாரம் பிரயோகித்து வரும் விடைப்புத் தன்மை கொண்ட வெற்று சொல்லணி (Rhetoric) பேருந்துகளில் பிரயாணம் செய்பவரின் 'துப்பறியும் நாவல்' பசியோடு

www.padippakam.com

ஒத்திசைந்து தீனியாக மாறிக் கொண்டிருப்பதைக் கவனிக்க வேண்டும். அவர்கள் செய்வது எதிர்ப்போ புரட்சியோ அல்ல. எதிர்ப்பையும் புரட்சியையும் வணிகப்படுத்தும் வேலையேயா கும்.''

'தனிநபர் தாக்குதல்' குறித்து பெரிதும் கவலைப்பட்ட 'அறிவுலகம்' மேற்கூறிய சொல்லணியை ஆரோக்கியமான விமர்சனமாகக் கருதுகிறது போலும்! ''தனி மனிதனின் சுதந்திரத்தையும், ஆளுமையையும் அழிக்கும் மார்க்சிய லெனினிய அமைப்பு என்ற அரக்கனுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட தாக்குதல்'', என்பதால் ஒருவேளை சிலர் ரகசியமாக மகிழ்ச்சியடைவும் கூடும்.

ம.யு. குழு தலித் பிரச்சனைக்கு எதிரான நிலையை நோக்கி நகர்கிறது என்பதற்கு எப்பேர்ப்பட்ட ஆணித்தரமான சான்று! சமீபத்தில் தோழர் கத்தார் அடையாளம் தெரியாத நபர்களால் சுடப்பட்டார் அல்லவா! அவர்களின் அடையாளம்கூட ஆதிக்க சாதி அடையாளம்தான் என்றும், ஒரு தலித் கலைஞரை ஒழித்துக் கட்ட ம.யு. குழு நடத்திய சதி என்றும் இந்தப் பிரச்சினையை ரவிக்குமார் மறுவாசிப்பு செய்யலாம். அதற்கு ஆந்திர போலீசையே ஆதாரம் காட்டலாம்.

கூட்டுவிவாத அரட்டையின் மூலம் வெளியிடப்படும் தமது 'அதிர்ச்சியூட்டும் பிரகடனங்களைக்' கேட்டுத் தமிழகமே நடுநடுங்கி நிற்பதாக எண்ணித் தம்மைத் தாமே வியந்து கொள்ளும் கோமாளிகள் கருவறை நுழைவையும் பரபரப்புப் போராட்டமாகவே கண்டதில் வியப்பில்லை. 'நாம் என்னவாகக் காண்கிறோமோ அவ்வாறே உலகம் இருக்கிறது', என்று கூறும் (பின்) நவீன அத்வைதிகளுக்கு கருவறை நுழைவும் பரபரப்பு விசயம்தான்.

**'எதிர்க் கலாச்சாரத்தை' இவர்கள் வாழ்க்கையில் எப்படி அமல்படுத்துகிறார்கள் என்று யாரும் கேள்வி எழுப்பக் கூடாதா? இது தனிநபர் தாக்குதலா? அனைத்து அதிகாரமும் (முக்கியமாக கம்யூனிஸ்டுகளின் சர்வாதிகாரம்) ஒழிக என்று கருத்தரங்க அறைகளின் கூரைகள் நடுங்க போர்ப் பிரகடனம் எழுப்பும் இவர்கள் அந்த யுத்தத்தை தங்கள் அன்றாட வாழ்க்கையில் எப்படி நடத்துகிறார்கள் என்பதை யாரும் அறியக் கூடாதா?**

பார்ப்பன இந்துமத எதிர்ப்பாளர்கள் என்ற வகையில், பெரியார், அம்பேத்கர் பணியைப் பாராட்டியும், சீர்திருத்தவாதிகள் என்ற வகையில் அவர்களது அரசியலை விமர்சித்தும் எழுதி வருகிறோம். விளிம்பு நிலை அரசியல் - கலாச்சாரத்தின் தலைவர்கள் என்று நாம் அவர்களைக் கருதவும் இல்லை; அவர்களே அவ்வாறு கருதிக் கொள்ளவுமில்லை. கழிசடைக் கலாச்சாரத்தின் தலைவர்கள் என்று இவர்கள் வழங்கியிருக்கும் புதுப்பதவியை அம்பேத்காரிஸ்ட்களும், பெரியாரிஸ்டுகளும்கூட ஏற்பதில்லை.

பின் நவீனத்துவத்தின் பார்வையில் ''அம்பேத்கரும், பெரியாரும் அரசு மையவாதிகள்; விளிம்பு நிலை மக்களை மையத்தை நோக்கி ஈர்த்த மையத்தின் கைக்கூலிகள்; பெரியாரோ ஒரு பகுத்தறிவு பயங்கரவாதி''. அனைத்திலும் பன்முகத் தன்மையை பார்க்கக்கூறும் இந்த அறிஞர்கள் பெரியாரையும், அம்பேத்கரையும் மட்டும் ஒற்றைப் பரிமாண மனிதர்களாகக் காட்டுவதேன்? இது கூட்டம் சேர்க்கும் தந்திரமா? அடிக்குப் பயந்த கோழைத்தனமா?

...''மைக்கேல் ஜாக்சன் மீதான வெறிக்கு எதிராகப் புதிய கலாச்சாரம் எழுப்புவது உள்ளீடற்ற எதிர்ப்பாம்!...'' மேற்பரப்பில் திளைக்க வேண்டியவர்கள் 'உள்ளீடு' பற்றிப் பேசலாமா? வடிவம் - உள்ளடக்கம், தோற்றம் - சாராம்சம் என்ற மார்க்சியத் தொற்று நோயிலிருந்து தளபதியே இன்னும் விடுபடவில்லை போலும்!

''ஜாக்சன் மீதான வெறியும், அதற்கெதிரான எதிர்ப்பும் ஒரே சமயத்தில் ஒரேவித சுழல் பாதைக்குள் சஞ்சரிக்கின்றன...'' என்கிறார் தளபதி.

முதலாளியும் தொழிலாளியும்கூட ஒரே சுழல் பாதைக்குள் தான் சஞ்சரிக்கின்றனர். தொழிலாளி போராடுகிறான்; முதலாளி ஒடுக்குகிறான். இந்த சுழல்பாதைக்குள் சிக்காமல், வீரம் - தியாகம் - கொள்கைப்பற்று போன்ற பெருங்கதையாடல்களுக்குப் பலியாகாமல், ஆனால் இரு தரப்பினரில் யார் வெற்றி பெற்றாலும் ஆதாயம் அடையக்கூடிய ஒரு பிரிவினர் இருக்கிறார்கள். 'ஆதிக்கச்' சொல்லாடலில் அவர்கள் கருங்காலிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். தளபதியின் படையை என்ன பெயரிட்டு அழைக்கலாம்?

இந்தியா டுடே வாசந்தியுடன் வானவில் கூட்டணி வைத்த தளபதி, புதிய கலாச்சார வாசகரை துப்பறியும் நாவல் பசி கொண்டவர் என்கிறார். எனில் இந்தியா டுடே வாசகர் விளிம்பு நிலை கலகக்காரரோ? 'புதிய கலாச்சாரம் புரட்சியை வணிகப்படுத்துகிறதாம்'. இந்தியா டுடே? வணிகத்தில் விளிம்பைக் கலக்கி புரட்சி நடத்துகிறது.

இந்தியா டுடேயில் மலம் துடைத்தபோது அது கலகத்தின் அரசியல்! அதையே மலராகக் கருதி முகர்ந்தபோது அது வேட்கையின் அழகியல்!

ரோசமும் கோபமும்கூட ஆள் பார்த்துதானே வருகிறது. சென்னை பூந்தமல்லியில் நடைபெற்ற கருத்தரங்கில் பின் நவீனத்துவத்தை விமர்சித்து (விடைப்பாக அல்ல நெகிழ்வாக) தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த தோழர் வெங்கட்ராமன் பேசி அமர்ந்த உடன் ஆவேசமாக மேடைக்குச் சென்றார் அறிஞர் அ. மார்க்ஸ். ''ஒரு டோட்டலிசத்தை வீழ்த்துவதற்கு இன்னொரு டோட்டலிசம்தான் தீர்வு என்றால் அதற்கும், இதற்கும் மயிர்ர்ர்ர்..ளவுகூட (அழுத்தம் அ. மார்க்சினுடையது) வேறுபாடு இல்லை'' என்று கர்ஜித்தார். அதாவது அரசியல் ரீதியாக முதலாளித்துவத்தின் அதிகாரத்திற்கும், பாட்டாளி வர்க்கத்தின் அதிகாரத்திற்கும் மயிரளவுகூட வேறுபாடு இல்லை என்று உறுமினார்.

அடுத்து, பின் நவீனத்துவம் பற்றி பெண்ணியப் பார்வையில் பேச வந்தார் வ. கீதா. பின் நவீனத்துவத்தை மறுத்துப் பேசினார். அத்துடன் விட்டிருந்தால் பரவாயில்லை, ''சாதி, மத அடையாளங்களோடு மக்கள் தனித்தனிக் குழுக்களாக இருக்க வேண்டும் என்று பின் நவீனத்துவம் மட்டுமல்ல அரசும் விரும்புகிறது. இதில் இருவரும் நட்பாய் உள்ளனர்...'' என்று விமர்சித்தார். அதாவது புதிய கலாச்சாரத்தின் விடைப்பான சொல்லணியில் கூறுவதென்றால் ''நீங்கள் அரசின் கைக்கூலிகள்'' என்று தோலுரித்தார்.

மேடையேறினார் அ. மார்க்ஸ். பார்வையாளர்கள் ஒரு இடிமுழக்கத்தை எதிர்பார்த்து திகிலுடன் காத்திருந்தனர்.

''நீங்கள் அமெரிக்காவில் இருந்து வந்த உடன் அல்தூசரைப் பற்றி எழுதினீர்கள். பூக்கோவைப் பற்றி பேசினீர்கள். எனக்கு பசுமையாக நினைவிருக்கிறது. இப்போது ஏனிந்த மாற்றம்?'' நெகிழ்ச்சியாகத்தான் கேட்டார் அ. மார்க்ஸ். ஆனால் அவருடைய கேள்வி அந்த வளாகமெங்கும் எதிரொலித்தது:

''தேவனே தேவனே என்னை ஏன் கைவிட்டீர்''.

கருத்தரங்கம் நடைபெற்ற இடம்: இறையியல் கல்லூரி வளாகம், பூந்தமல்லி.

■

---

● முன் எச்சரிக்கையாக ஒரு குறிப்பு:

தற்செயலாக நினைவுக்கு வந்ததால் இந்த பைபிள் வாசகத்தை எழுதிவிட்டோம். இதற்கும் வேறு உள் நோக்கம் கற்பித்து விட வேண்டாம் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

படிப்பகம்

www.padippakam.com

**ஜ**னவரி - 25, தஞ்சையில் ஆயிரக் கணக்கான தமிழ் மக்கள் பங்கு பெற்ற 'தமிழ் மக்கள் இசைவிழா', எழுச்சியுடன் நடந்தது குறித்து அறிந்திருப்பீர்கள். தொடர்ச்சியாக, 28 காலையில் திருவையாறு தியாகய்யர் உற்சவத்தின் முக்கிய நிகழ்ச்சியான பஞ்சரத்ன கீர்த்தனை பாடும் நேரத்தில் 'தமிழில் பாடு' என்று முழக்கமிட்ட எமது தோழர்கள் 18 பேர் கைது செய்யப்பட்டனர்.

காவிரிக் கரையில் நம் மொழியின் மீதான தீண்டாமைக்கு எதிராக முழங்கிய தமிழ் மக்களின் குரலை - உணர்வை, ரகளை - கலாட்டா என்று மசாலா குமுதம் முதல் ஆதித்தனாரின் தினத்தந்தி வரை செய்தி வெளியிட்டன. மேற்கண்ட பத்திரிகைகளின் கருத்துக்களைக் கேள்விகளாகத் தொகுத்து சுருக்கமாக விடையளித்திருக்கிறோம்.

• 'உங்களின் திருவையாறு ரகளை' தெலுங்கு மொழியின் மேல் தமிழின வெறியர்கள் ஏவியிருக்கும் வன்முறை தானே? பச்சையான மொழித் துவேஷம்தானே?

- டைம்ஸ் ஆப் இந்தியா.

☆ தெலுங்கில் பாடக்கூடாது என்பதற்காக நாங்கள் போராடவில்லை. தமிழில் பாடாதே என்பதை இன்றுவரை சட்டமாக வைத்திருக்கும் சநாதனத்தை எதிர்ப்பது மொழித் துவேஷமா? 1952 தியாகய்யர் உற்சவத்தில் தமிழிசை அறிஞர் மறைந்த தண்டபாணி தேசிகர் தமிழில் பாடியதற்காக மேடையைத் தீட்டுக் கழித்தது என்ன வகை துவேசம்? தமிழில் பாடு என்பதை தெலுங்கில் பாடாதே என்பதாக ஏன் திசைதிருப்ப வேண்டும்?

கர்நாடக இசையில் மட்டுமல்ல, கருவறையிலும் தமிழ் கூடாது என்பவர்கள் துவேஷத்தைப் பற்றி கதைக்கிறார்கள். என்ன செய்வது, அமெரிக்கா கூட 'மனித உரிமை' பற்றி பேசுகிறதே!

• தியாகய்யர் உற்சவத்தில் கலந்து கொள்ளும் வித்வான்களில் 90 சதவீதம் பேர் தமிழர்களாயிருக்கும் போது தமிழ்நாட்டுக்குத்தானே பெருமை?

- டைம்ஸ் ஆப் இந்தியா.

☆ அடிமைத்தனம் பெருமையல்ல. விஜயநகர அரசுக்குப் பின் தமிழகத்தை ஆண்ட தெலுங்கு மன்னர்களின் துணையுடன் பார்ப்பனியம் தமிழ் ஒழிப்பு வேலையை சகல துறைகளிலும் செய்துவந்தது. அதன் வரலாற்றுப் பதிவுதான் தியாகய்யர் உற்சவம். அரசு ஆதரவுடன் இன்றும் தொடரும் இந்த அடிமைத்தனத்தில் பொறுக்கித் தின்னும் சில தமிழர்களால் நமக்கு இழிவுதான்; பெருமையல்ல.

• தேசிய ஒருமைப்பாட்டிற்கு இலக்கணமாகத் திகழும் தியாகய்யர் உற்சவத்தை தமிழின் பெயரால் பிளப்பது தவறல்லவா?

☆ ஹிட்லரின் பெயரால் உலக ஒருமைப்பாடு இருக்க முடியுமா? பார்ப்பன இந்துப் பண்பாட்டின் மூலம் இந்திய ஒற்றுமை ஏற்படுமா? தியாகய்யர் மட்டுமல்ல, பாரதீய ஜனதா பரிவாரங்கள்கூட ராமனின் பக்தர்கள்தான். இந்துத்துவத்தின் கலைத் துறையும், அரசியல் துறையும் வேறல்ல. ஏறி மிதிக்கும் இந்து ராஷ்டிர ஒருமைப்பாட்டை ஒழிப்பதன் மூலம்தான் - சமத்துவத்தின் அடிப்படையிலான ஒற்றுமை சாத்தியம்.




• தெலுங்குக் கீர்த்தனைகளை மறுப்பவர்கள், ஆந்திரத்துக் கிருஷ்ணா நீரையும், நெல்லூர் அரிசியையும் புறக்கணிப்பார்களா?

- வித்வான்கள் கேட்டதாக தினமலர்.

☆ நெல்லூர் அரிசிக்காக தியாகய்யர் தான் வயலில் இறங்கி உழுதாரா? தெலுங்கு கங்கை திட்டத்துக்கு சங்கீத வித்வான்கள்தான் கால்வாய் வெட்டினார்களா? நதி நீர் ஒப்பந்தமோ, அரிசி வியாபாரமோ இரு அரசுகளுக்கிடையிலான வியாபார ஒப்பந்தம். கொடுக்கல் வாங்கல் பேரம். அவ்வளவுதான். நெல்லூர் அரிசிக்காகத் தெலுங்குப் பாட்டு பாடவேண்டுமென்றால் வளைகுடா பெட்ரோலுக்காக அல்லாவின் புகழ் பாடலாமா? வித்துவான்கள் பதில் சொல்லட்டும்.

• தியாகய்யர் விழாவில் 'தமிழ்ப் பாட்டுப் பாடு' என்று இவர்கள் செய்த ரகளை - திராவிடர் கழக மாநாட்டில் 'பக்திப் பாடல்களைப் பாடு' என்பதைப் போலிருக்கிறது.

- சோ - துக்ளக்கில்.

☆ தெலுங்கும், தமிழும் - ஆத்திகம், நாத்திகம் போல எதிரி என்கிறார் சோ. மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுபோடுகின்ற சோ - அவரவர் கொள்கையை அவரவர் இடங்களில் மட்டுமே பேச வேண்டும் என்றும் கூறுகிறார். 'ரூப் கன்வரை உடன்கட்டை ஏற்றிக் கொன்றதை பார்ப்பனியத்தை மறுப்பவர்கள் எதிர்க்கக்கூடாது. தேவதாசி முறையை ஒழிப்பதற்கு சுயமரியாதை இயக்கத்திற்கு அருகதையில்லை. சாதியை மறுப்பவன் தீண்டாமை பற்றி பேசக்கூடாது, கருவறை நுழைவில் கம்யூனிஸ்டுகளுக்கு வேலையில்லை'. — அடுத்தவன் முதுகில் சவாரி செய்பவனின் நியாயம் இதுதான்.

• 'தமிழன் தமிழ்ப் பாட்டைப் பாடு என்று கேட்கும் கேவலமான நிலை உள்ளது'.

- 9.2.97, சென்னையில் கருணாநிதி.

☆ ஆட்சியிலிருந்த போதிலும், இப்படிக் கெஞ்சவேண்டியிருப்பதுதான் அதைவிடக் கேவலமான நிலை.

• ... ''தியாகய்யர் உற்சவம் ஆழமான கலாச்சாரத்தின் தத்துவ வெளிப்பாடு''...

- வாசந்தி, இந்தியா டுடேயில்.

☆ சசிகலாவை மிஞ்சும் ஒப்பனையுடன் மடிசார் மாமிகள். வளர்ப்பு மகனின் மேக்-அப்பில் வித்வான்கள். தொலைக்காட்சியில் இடம்பெற நடத்தும் கோடம்பாக்கத்து கனவுலக ஆட்டங்கள். பன்னாட்டு நிறுவனங்களின் பிச்சையில் தியாகய்யர் உற்சவம்.

படிப்பகம்

www.padippakam.com

‘ஆழமான கலாச்சாரம்’ = பார்ப்பனியம், ‘தத்துவம்’ = உலக மயம்.

- ‘உண்மையான சங்கீதத்துக்கு மொழி, ஜாதி என்கிற பேதம் கிடையாது’
  - ஏ.கே. பழனிவேல், உற்சவ கமிட்டி காரியதரிசி, இந்தியா டுடேயில்.

☆ உண்மையான சங்கீதக்காரரான பழனிவேலின் இசை வேளாளர் சமூகத்தினர் தியாகய்யர் விழா மேடைக்கே அனுமதிக்கப்படவில்லை; தெருவில் நின்றுதான் வாசிக்க வேண்டியிருந்தது. பிறகு உள்ளே வர அனுமதி கிடைத்த போது உட்கார அனுமதியில்லை; உட்கார அனுமதி கிடைத்தபோதும் சட்டை போட அனுமதி இல்லை. சாதி ஆதிக்கம் இல்லாமல் வேறென்ன காரணம் இதற்கு? ஷேக் சின்ன மவுலானா போன்ற முஸ்லிம்களும், பெண்களும் கூட நாதசுரம் வாசிக்கிறார்களே, பார்ப்பனரில் நாதசுர வித்வான் யாரேனும் உண்டா? இல்லையெனில் அதற்கு காரணம் என்ன? காரணம் சாதி உணர்வல்லாமல் வேறென்ன!

மொழி பேதம் இல்லை என்கிறார் பழனிவேல். நாதசுரத்துக்குத்தான் மொழி கிடையாதே. அதிலாவது அவர் ஒரு தேவாரத்தை வாசிக்கட்டும் பார்ப்போம்.

- ‘முக்காப்லா, சொக்காப்லா..ன்னு சினிமாவில பாடுகிறார்களே, அதுக்கு என்ன அர்த்தம்னு முதல்ல கேளுங்க...’
  - வித்வான்கள் கேட்டதாக குமுதம்.

☆ கொட்டாம்பட்டி ரோட்டுலே குட்டிபோற ஷோக்குலே’’ன்னு பாட்டு போட்டவர்தான் தியாகப் பிரம்ம ஆராதனை மகோத்ஸவக் கமிட்டியின் செயலாளர் குன்னக்குடி. அவரைக் கேளுங்கள்.

உற்சவத்தின் அருமை பெருமைகளை அழுதுவிட்டு அடுத்த பக்கத்தில் அம்மணப் படம் போடும் வாசந்தி, மாலன் ஆகியோரைக் கேளுங்கள்.

முக்காப்புலா, சொக்காப்புலாவை நாங்கள் எதிர்க்கிறோமா இல்லையா என்பதற்கு வாத்ஸ்யாயனரின் வாரிசுகள் சான்றிதழ் தரத் தேவையில்லை.

- ‘தமிழிசையை ஆய்வுசெய்து ஆக்கபூர்வமாக வளருங்கள். அதை விட்டு உற்சவத்தில் ரகளை செய்வது உங்கள் இயலாமையைத் தானே காட்டுகிறது?

☆ ‘‘நீங்கள் ஏன் இன்னும் முன்னேறவே மாட்டேன் என்கிறீர்கள்?’’ என்று வெள்ளைக்காரன் நம்மைக் கேட்பது போல் இருக்கிறது இந்தக் கேள்வி. கொள்ளையடித்தவன் வளர்ந்த நாடு; பறிகொடுத்த, நாம் பின்தங்கிய நாடு என்ற கதைதான்.

தமிழிசையைத் திருடி ‘கர்நாடக இசை’ என்று லேபில் ஒட்டியிருக்கிறீர்களே, அதை முதலில் உரித்தெடுக்கிறோம். தமிழிசையை வளர்ப்பது பற்றி அப்புறம் பார்த்துக் கொள்கிறோம்.

- ‘‘தமிழிசை விழாக்கள் திருவையாறு உட்பட தமிழகத்தின் பல இடங்களில் நாகரீகமாகக் கொண்டாடுகிறார்கள். நீங்கள்தான் நாகரீகம் தெரியாத டப்பாங்குத்து கும்பலாகத் தெரிகிறீர்கள்.’’

☆ தமிழிசை கனவான்கள் உங்களுடன் அய்க்கியம் ஆகிவிட்டனர். அவர்கள் உங்களுக்கு ‘இசைப் பேரறிஞர்’ பட்டங்களையும், நீங்கள் அவர்களுக்கு ‘சங்கீத பூஷணம்’ விருதுகளையும் கொடுத்து ஒருவருக்கொருவர் முதுகு சொறிகிறீர்கள். இதில் சிக்காதவர்கள் நாங்கள் மட்டுமே. நாகரிகம் தெரியாத டப்பாங்குத்து கும்பல் என்று நீங்கள் அழைப்பவர்களைத்தான் நாங்கள் தமிழ் மக்கள் என்கிறோம்.

> ✪ ***தெலுங்கு மொழியின் மேல் ஏவியிருக்கும் வன்முறை சரியா?***
>
> ✪ ***தியாகய்யர் உற்சவத்தால் தமிழ்நாட்டுக்குத் தானே பெருமை?***
>
> ✪ ***சங்கீதத்துக்கு மொழி ஜாதி பேதம் கிடையாதே?***
>
> ✪ ***தமிழிசையை வளர்க்காதது உங்கள் இயலாமைதானே?***
>
> ✪ ***நீங்கள் நாகரீகம் தெரியாத டப்பாங் குத்து கும்பலா?***

- ‘தமிழில் பாடு’ என்கிறீர்கள். தியாகய்யர் தன் தாய்மொழியான தெலுங்கில் மட்டுமே கீர்த்தனைகளைப் பாடியிருக்கிறார். தியாகய்யர் உற்சவத்தில் அதைத்தானே பாட முடியும்?

☆ மேலோட்டமாகப் பார்த்தால் நியாயம் போலத் தெரிகிற கேள்வி இது. ஆனால் தியாகய்யர் தன் தாய் மொழியான தெலுங்கில் மட்டும் பாட்டெழுதவில்லை. சமஸ்கிருதத்திலும் தான் எழுதினார். தமிழில் ஏன் எழுதவில்லை என்பதற்கு அது இழிமொழி எனப் பார்ப்பனர்களால் கருதப்பட்டது தான் காரணம்.

தியாகய்யருக்கு முன்னால் தமிழில் செவ்வியல் இசை இருந்தது. ஆதி மும்மூர்த்திகள் எனப்படும் சீர்காழி மூவர் இருந்தனர்; தேவாரம் இருந்தது. தமிழ் செவ்வியல் இசை மரபை இசை வேளாளர்களும், ஓதுவார்களும் வளர்த்துள்ளனர். இவற்றிலிருந்துதான் தியாகய்யர் தனது இசையை வளர்த்துக் கொண்டார்.

அதுமட்டுமல்ல; சிலப்பதிகாரத்திற்கும் முந்தைய செவ்வியல் இசை மரபு தமிழுக்கு உண்டு. அந்த மரபைக் களவாடி உருவாக்கப்பட்டதுதான் கர்நாடக இசை. இதைத் தஞ்சை ஆபிரகாம் பண்டிதரும் இன்னும் பல அறிஞர்களும் பல ஆய்வு நூல்கள் மூலம் அம்பலப்படுத்தியுள்ளனர். இவற்றுக்கு யாரும் பதில் சொன்னதுகூட இல்லை.

கர்நாடக இசையின் இலக்கண நூலான சங்கீத ரத்னாகரம் 13ம் நூற்றாண்டைச் சேர்ந்ததுதான். ஆனால் தமிழகத்தின் இசையே கர்நாடக இசைதான் என்ற வரலாற்றுப் புரட்டு இன்றுவரை பார்ப்பனர்களால் சாதிக்கப்பட்டு வருகிறது.

திருவையாற்றில் மட்டுமின்றி கர்நாடக இசைக் கச்சேரி எதிலும் தமிழ்ப் பாடல் பாடப்படுவதில்லை, அல்லது துக்கடாவாகப் பாடப்படுகிறது என்ற நிலையை மாற்ற தோன்றியது தான் தமிழிசை இயக்கம். இன்னமும் இந்த நிலையில் பெரிய மாற்றமில்லை.

எனவே தியாகய்யர் விழாவில் ‘தமிழில் பாடு’ என்று முழக்கம் எழுப்பியதன் நோக்கம் அங்கு ஏதோ இரண்டு தமிழ்ப்பாட்டுகளைப் பாடவைக்க வேண்டும் என்பது அல்ல; ‘களவாடிய இசையே கர்நாடக இசை’ என்ற வரலாற்று உண்மையை நிலைநாட்டுவதற்கான போராட்டத்தின் துவக்கம்தான் அது.

இத்தனை ஆண்டுகளாக எவ்வளவோ பேர் இப்பிரச்சினையை எழுப்பியபோதும், உலக்கை விழுங்கியவனைப்போல கம்மென்று இருந்தவர்கள் இப்போது விசில் சத்தம் கேட்டவுடனே ஒன்றுமே தெரியாத அப்பாவிகள் போல கேள்வி கேட்கிறார்களே, சும்மா சொல்லக்கூடாது - சரியான தொழில் முறைத் திருடர்கள்தான். ■

படிப்பகம்

www.padippakam.com

# பொது சிவில் சட்டம் மாயையும் உண்மையும்

4

**சூரியன்**

இக்கட்டுரையின் மூன்று பகுதிகள் இதுவரை வெளி வந்துள்ளன. இந்திய அரசியல் சட்டம் மதம், மதச்சார்பின்மை ஆகியவற்றை வரையறுத்துக் கூறவில்லை என்பதையும், இவை குறித்து உச்சநீதிமன்றம் அளித்துள்ள விளக்கங்கள் மதச்சார்பின்மைக் கோட்பாட்டுக்கே எதிரானவை என்பதையும் ஏற்கனவே தொகுத்துக் கூறியிருந்தோம்.

மதச்சார்பற்ற சிவில் சட்டத்துக்கான போராட்டமும், மதச்சார்பற்ற அரசுக்கான போராட்டமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கவியலாதவை என்றும், ஜனநாயக சக்திகள் இத்தகைய போராட்டத்தை முன்னெடுக்க வேண்டுமென்றும் ஏற்கனவே எழுதியிருந்தோம். மதக் கோட்பாடுகளில் உள்ள ஓரளவு முற்போக்கான அம்சங்களின் துணை கொண்டு மதச் சட்டத்தை ஜனநாயகப் படுத்துவதோ, மதச்சார்பற்ற கொள்கைகளின் துணை கொண்டு மதத்தைச் சீர்திருத்தலாம் என்று கனவு காண்பதோ அபத்தமானது என்றும் சுட்டிக் காட்டியிருந்தோம்.

• • •

சீர்திருத்த வாதிகளின் இத்தகைய குளறுபடிகள் ஒருபுறமிருக்க, அதி புரட்சிகரமான சவடால்கள் சிலவற்றை மதச்சார்பற்ற சிவில் சட்டத்திற்கெதிராக பின் நவீனத்துவ நோயால் பீடிக்கப்பட்ட அறிஞர்கள் சிலர் முன் வைக்கின்றனர்.

"எந்த சமூகத்தினர் மீதும் எந்தவொரு சட்டத்தையும் கட்டாயமாகத் திணிக்கக் கூடாது; தனது மரபுகளை உயர்த்திப் பிடிக்கும் உரிமை ஒவ்வொரு சமூகத்துக்கும் உண்டு; அவ்வாறு திணிப்பது பன்முகத் தன்மைக்கு எதிரானது; மதச் சட்டமும் இருக்கட்டும், மதச்சார்பற்ற சட்டமும் இருக்கட்டும் - தனக்கு எது வேண்டுமென்பதை சம்பந்தப்பட்ட பெண் தீர்மானிக்கட்டும்" என்று இன்னும் பல ரகங்களில் இவர்களது வாதம் முன்வைக்கப்படுகிறது.

உடன்கட்டை ஒழிப்புச் சட்டம் முதல் தீண்டாமை ஒழிப்புச் சட்டம் வரை அனைத்து சட்டங்களையும் எதிர்க்கும் பிற்போக்குவாதிகளுக்கு மிகவும் உவப்பான கண்ணோட்டம் இதுதான் என்பது ஒருபுறமிருக்க இக்கண்ணோட்டத்தின் அடிப்படையை ஆராய்வோம்.

"சட்டத்தைத் திணிக்கக் கூடாது" என்ற வாதமே தவறானதாகும். ஒரு வர்க்கம் அல்லது குழு பிறிதொரு பிரிவினர் மீது அவர்களது விருப்பத்திற்கு விரோதமாகவும் திணிப்பதற்குப் பெயர்தான் சட்டம். சட்டம் என்பதே கட்டாயம் அல்லது நிர்ப்பந்தம் தான். தொழிலாளி வர்க்கத்தின் மீது முதலாளிவர்க்கம் இவ்வாறுதான் தன் சட்டங்களைத் திணிக்கிறது. அவ்வாறே முதலாளித்துவ வர்க்கத்தின் மீது திணிக்கப்படும் சர்வாதிகாரம் தான் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம்.

தீண்டாமை ஒழிப்பு, சதி ஒழிப்பு, பலதார மண ஒழிப்பு சட்டங்களும் பிற்போக்காளர்கள் மீது திணிக்கப்படுபவைதான்.

ஒரு மதத்தின் மரபை மீறி அவர்கள் மீது அரசு தனது சட்டத்தை திணிக்கக் கூடாது என்று இந்த 'ஜனநாயகவாதிகள்' உளறும்போது மதத்தின் யோக்கியதையை இவர்கள் மறந்து விடுகின்றனர். ஒழுக்கம் என்ற பெயரில் பெண்கள் மீதும், ஒடுக்கப்பட்ட சாதியினர் மீதும் மதம் விதிக்கின்ற கட்டுப்பாடுகளும் திணிக்கப்பட்டவைதானே. அரசின் அதிகாரம் பற்றிக் கவலைப்படுபவர்கள் மதத்தின் அதிகாரம் குறித்து மவுனம் சாதிப்பது ஏன்?

மேலும் தற்போது நிலவும் மதத் தனிநபர் சட்டம் என்பதன் உண்மையான பொருள் மதம் மற்றும் அரசின் கூட்டு அதிகாரம் என்பதன்றி வேறு என்ன? மதத்தின் ஒழுக்கம் என்று மதவாதிகளாலும், ஆதிக்க சக்திகளாலும் வியாக்கியானம் செய்யப் படுபவற்றை, அந்த மதத்தைச் சேர்ந்த மக்கள் (குறிப்பாகப் பெண்கள்) மீது தனது அதிகார / ஆயுத வலிமை கொண்டு அரசு நிலைநாட்டுகிறது. இதுதான் மதத் தனிநபர் சட்டம்.

அரசுக்கும் மதத்திற்கும் இடையிலான இந்தக் கூட்டணியை உடைப்பது தான் மதச்சார்பற்ற அரசுக்கான கோரிக்கையின் சாரம்.

ஒழுக்கத்தின் காவலன் என்ற அதிகாரத்தை மதத்திடமிருந்து பிடுங்கி அரசிடம் ஒப்படைக்கிறது மதச்சார்பின்மை. அதாவது ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் அது நல்லொழுக்கம், தீயொழுக்கம் அல்லது தண்டனைக்குரிய தீயொழுக்கம் என்பதை அரசு தீர்மானிக்கிறது. இந்தத் தர நிர்ணய அளவுகோல் ஒரு குறிப்பிட்ட அரசின் வர்க்கத் தன்மைக்கேற்ப வேறுபடும். சட்டம் என்ற பெயரில் உடைமை வர்க்கங்களால் திணிக்கப்படும் இத்தகைய ஒழுக்கங்களை ஒடுக்கப்பட்ட வர்க்கம் எதிர்த்துப் போராடும்.

ஆனால் ஒழுக்கத்தின் காவலன் என்ற பொறுப்பு மதத்திற்கு அளிக்கப்படும் போது அது தனது தார்மீக நெறிகள் குறித்து அறிவுபூர்வமான விவாதத்தில் ஈடுபடுவதில்லை. மாறாக, அந்தத் தார்மீக நெறிகள் கடவுளின் ஆணை என்றும் அது விவாதத்திற்கப்பாற்பட்டது என்றும் மிரட்டுகிறது. ஆணாதிக்கத்துக்கு எதிரான பெண்ணுரிமை போராட்டம், சொத்துடைமை ஆதிக்கத்திற்கெதிரான உழைக்கும் மக்களின் போராட்டம், மற்றும் அனைத்து வர்க்கப் போராட்டங்களையும் மதத்திற்கெதிரான கலகமென்று முத்திரை குத்தி நசுக்குகிறது.

எனவே அனைத்து அதிகாரத்தையும் எதிர்ப்பதாகக் கூறும் இந்த சவடால் அறிஞர்கள் நடைமுறையில் மதத்தின் அதிகாரத்திற்கு மண்டியிடச் சொல்கிறார்கள்.

"தனிநபர் உரிமை என்ற பெயரில் ஒரு குழு அல்லது சமூகத்தின் உரிமை பறிக்கப்படுகிறது" என இன்று பின் நவீனத்துவ அறிஞர்கள் வைக்கும் வாதம்தான் முன் நவீனத்துவ காலத்தில், அதாவது 19-ஆம் நூற்றாண்டில், பார்ப்பனப் புரோகிதர்களால் முன் வைக்கப்பட்டது.

கணவனை இழந்த பெண்ணின் உயிர் வாழும் உரிமையைப் பாதுகாக்க பிரிட்டிஷ் அரசு உடன்கட்டை ஒழிப்புச் சட்டம் கொண்டுவர முயன்ற போது அது இந்து சமூகத்தின் உரிமையில் தலையிடுவதாகக் கூறிப் புரோகிதர்கள் எதிர்த்தனர். இன்று கருவறை நுழைவையும் இந்த அடிப்படையில்தான் எதிர்க்கின்றனர். ஷாபானுவுக்கு எதி

படிப்பகம்

www.padippakam.com

ராக முஸ்லீம் பழமைவாதிகள் திரண்டதும் இதே அடிப்படையில்தான்.

ஒரு மதக்குழுவின் பண்பாடு, சாதியின் பண்பாடு, சிறுபான்மையினரின் பண்பாடு என்ற பெயர்களில் பின் - நவீனத்துவப் புரோகிதர்கள் இதற்குத்தான் வக்காலத்து வாங்குகின்றனர்.

தனிநபர் மீது மதம் செலுத்தும் ஆதிக்கத்திற்கு இவர்கள் என்ன பதில் சொல்கிறார்கள்? ஷா பானுவுக்கு என்ன வழி சொல்கிறார்கள்?

மதச்சார்பற்ற சட்டமும் இருக்கட்டும்; மதச்சட்டமும் இருக்கட்டும். தனக்கு விருப்பமானதைப் பெண் தெரிவு செய்து கொள்ளட்டும் என்கிறார்கள். இதையேதான் ராஜமாதா விஜயராஜி சிந்தியாவும் கூறுகிறார். கட்டாயமாக உடன்கட்டை ஏற்கக் கூடாது; தானாக விரும்பி உடன்கட்டை ஏறுவதைத் தடுக்கவும் கூடாது என்கிறார்.

இந்த அடிப்படையில் தானாக விரும்பி ஒரு பெண் இரண்டாவது அல்லது மூன்றாவது தாரமாக வாழ்க்கைப் படுவதையோ, அல்லது கணவன் அவ்வாறு திருமணம் செய்து கொள்ள சம்மதிப்பதையோ, தானாக விரும்பி வரதட்சிணை கொடுப்பதையோ கூட தடுக்கக் கூடாது. தீண்டாமை ஒழிப்புச் சட்டத்துக்கும் இதைப் பொருத்தினால் மனமுவந்து தீண்டாமைக்கு உட்படுவதற்கு ஒருவருக்கு உரிமை உண்டு என்றுதான் கொள்ளவேண்டும்.

ஆணாதிக்கமும், சாதி ஆதிக்கமும் கோலோச்சும் இச் சமூகத்தில் பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட சாதியினரின் 'சுதந்திரத் தேர்வு' எவ்வளவு சுதந்திரமானதாக இருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. அடிமையாக வாழ்வதற்கான உரிமையியல் பெற்றுத் தருவதற்குத்தான் பின் நவீனத்துவ அறிஞர்கள் எப்படிப் போராடுகிறார்கள்!

இந்த வெட்கங்கெட்ட கைக்கூலித்தனத்தை நியாயப்படுத்த பன்முகத்தன்மை, பன்முகமான மதிப்பீடுகள், அடையாளங்கள் என்ற பல வண்ணச் சொற்களுக்குப் பின்னே ஒளிந்து கொள்கிறார்கள். அந்த மதிப்பீடுகளின் தன்மை என்ன, அடையாளங்களின் உட்கிடை என்ன என்பது குறித்து ஆராயக்கூடாது என்கிறார்கள்.

இவ்வாறு பூடகமான தத்துவ ஞான சேட்டைகளில் ஈடுபடுவதற்குப் பதிலாக, ஒவ்வொரு சாதி, மதம் மற்றும் இனக்குழுவுக்கான தனித்தனி சிவில், கிரிமினல் சட்டங்களை உரு

> "தனிநபர் உரிமை என்ற பெயரில் ஒரு குழு அல்லது சமூகத்தின் உரிமை பறிக்கப்படுகிறது" என இன்று பின் நவீனத்துவ அறிஞர்கள் வைக்கும் வாதம்தான் முன் நவீனத்துவ காலத்தில், அதாவது 19-ஆம் நூற்றாண்டில், பார்ப்பனப் புரோகிதர்களால் முன்வைக்கப்பட்டது.

வாக்கும்முயற்சியில் இவர்கள் நேரடியாக, ஈடுபடுவார்களேயானால், தாங்கள் கோமாளிகள் என்ற உண்மையை நடைமுறையில் புரிந்து கொள்வார்கள்.

பலவிதமாக முன் வைக்கப்படும் இவ்வாதங்கள் அனைத்தும் தற்போது நிலவுகின்ற போலி மதச்சார்பின்மையை நியாயப்படுத்துவதற்கோ, அல்லது இதைவிடப் பிற்போக்கான நிலைமைக்கு சமூகத்தைத் தள்ளுவதற்கோதான் துணை நிற்கின்றன.

• • •

இன்னொரு பிரிவினர் "சிவில் சட்டம் குறித்த விவாதமே வெட்டிப் பேச்சு என்றும் இதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் கிராமப் பஞ்சாயத்துகள் தனியே இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று சுட்டிக் காட்டுகிறார்கள்.

இது ஓரளவு உண்மையே. கிராமப் பஞ்சாயத்துகளின் சில தீர்ப்புகள் மற்றும் மரபுகள், நீதிமன்றம் மற்றும் சட்டங்களைக் காட்டிலும் முற்போக்கானவையாக இருப்பதும் உண்மைதான். ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலும், பழங்குடி மக்கள் மத்தியிலுமே விதிவிலக்காக இத்தகைய எடுத்துக்காட்டுகள் உள்ளன.

> மத ஆதிக்க சக்திகளும், இனக்குழுக்களின் நாட்டாமைகளும் வழங்கும் பல கொடுமையான தீர்ப்புகள் தனிநபர் சட்டங்களால் காப்பாற்றப்படுகின்றன. எனவே மத உரிமை, குழு உரிமை, மரபு, பண்பாடு என்ற பெயர்களில் இழைக்கப்படும் இத்தகைய அநீதிகளை அனுமதிக்கவியலாது.

ஆனால் பெரும்பான்மை கிராமப் பஞ்சாயத்துகள் நிலப்பிரபுத்துவ ஆதிக்கம், சாதி ஆதிக்கம், ஆணாதிக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் தான் தீர்ப்பு வழங்குகின்றன. இத்தகைய தீர்ப்புகளுக்கெதிராகவும், ஜனநாயக வழிப்பட்ட மக்கள் நீதிமன்றம் அமைப்பதற்காகவும் கீழிருந்து போராட்டம் நடத்த வேண்டியுள்ளது.

ஆனால் இதற்காக மேலிருந்து சட்டத்திருத்தம் கொண்டுவரும் முயற்சியைக் கைவிட முடியாது. நிலப்பிரபுத்துவக் கொடுங்கோன்மையின் கீழ் வழங்கப்படும் பாரபட்சமான, கொடூரமான பல தீர்ப்புகளுக்கு எதிராக பாதிக்கப்பட்ட மக்கள் நகரத்தையும், நீதிமன்றத்தையும் நாடி வருவதை நாம் நடைமுறையில் பார்த்து வருகிறோம்.

ஜமாத் போன்ற மதப் பஞ்சாயத்துகளும், பழங்குடி சாதிப் பஞ்சாயத்துகளும் தம் விருப்பப்படி தண்டனை வழங்குகின்றன. கசையடி, சமூகப் புறக்கணிப்பு, அநியாய அபராதம் போன்ற இந்தத் தீர்ப்புகளெல்லாம் அரசியல் சட்டப்படி ஒரு குடிமகனின் அடிப்படை உரிமைக்கு எதிரானவை; கிரிமினல் சட்டப்படி இந்தப் பஞ்சாயத்துக்காரர்கள் குற்றவாளிகள்.

மத ஆதிக்க சக்திகளும், இனக்குழுக்களின் நாட்டாமைகளும் வழங்கும் பல கொடுமையான தீர்ப்புகள் தனிநபர் சட்டங்களால் காப்பாற்றப்படுகின்றன. எனவே மத உரிமை, குழு உரிமை, மரபு, பண்பாடு என்ற பெயர்களில் இழைக்கப்படும் இத்தகைய அநீதிகளை அனுமதிக்கவியலாது.

• • •

மதச்சார்பற்ற ஜனநாயக ரீதியான சிவில் சட்டம் தேவை என்பதைக் கருத்தளவில் ஏற்றுக் கொள்ளும் சிலர் "இச்சட்டத்தை 1950இலேயே கொண்டு வந்திருக்கவேண்டும்; இன்று இந்து மத வெறி மேலோங்கியிருக்கும் தருணத்தில் இது சாத்தியமில்லை" என்கின்றனர். மார்க்சிஸ்டு கட்சி - சார்ந்த அறிவு ஜீவிகளோ இசுலாமியப் பெண்களே இன்று இதற்கு ஆதரவாக வரமாட்டார்கள்" என்று வாதிடுகிறார்கள்.

இவையனைத்துமே தவறான வாதங்கள். மதச்சார்பற்ற சட்டம் ஒன்றைக் கொண்டுவர அரசியல் நிர்ணய சபையில் அம்பேத்கர் முயன்றபோது அதை முறியடிக்க இந்து, முஸ்லிம் மத வாதிகள் கூட்டணி அமைத்துக் கொண்டார்கள் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டோம்.

படிப்பகம்

www.padippakam.com

இன்று ஒருபடித்தான சிவில் சட்டம் வேண்டும் என பாரதீய ஜனதா கூச்சலிடும்போது பிற கட்சிகள் அஞ்சி நடுங்கி ஓடி ஒளிவதுதான் மையமான பிரச்சினை. மாறாக, அரசு விவகாரங்களிலிருந்தும், அரசியலிலிருந்தும், மதத்தை அறுத்தெறிகின்ற இலக்கண சுத்தமான மதச்சார்பின்மையையும், அதன் அடிப்படையிலான சிவில் சட்டத்தையும் கொண்டு வருவதற்குப் போராடத் துவங்கினால், பாரதீய ஜனதாவின் இருப்பே கேள்விக்குள்ளாக்கப்படும்; அத்தகைய சிவில் சட்டத்தை எதிர்ப்பதில் அது முன்னணியில் நிற்கும்; அம்பலப்பட்டும் போகும்.

மதச்சார்பற்ற சக்திகளுடன் இணைந்து இந்து மதவெறியர்களை ஒழித்துக் கட்டுவதா, இந்து மதவெறியர்களுடன் கூட்டு சேர்ந்து கொண்டு தமது மத ஆதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்வதா என்று இசுலாமியப் பழமைவாதிகளும் மதவெறியர்களும் முடிவு செய்ய வேண்டியிருக்கும்.

எனவே, இந்து மதவெறிக் கும்பல் வளர்ந்து அம்பலப்பட்டு நிற்கும் இன்றைய தருணத்தைக் காட்டிலும் இப்போராட்டத்தை நடத்துவதற்கு வேறு பொருத்தமான தருணம் கிடைக்காது என்பதே உண்மை.

இசுலாமியப் பெண்களே இதை ஆதரிக்கமாட்டார்கள் என்ற கூற்றில் இந்து சட்டத்தால் இந்துப் பெண்களுக்குப் பிரச்சினை ஏதுமில்லை என்ற கருத்து தொக்கி நிற்கிறது.

இசுலாமிய மக்கள் மீதான தாக்குதலும், மதக்கலவரங்களும் மிகுந்துள்ள சூழலில் தனது சமூகம் என்ற அடிப்படையில் இசுலாமியச் சமூகத்துடன் அப்பெண்கள் தம்மை நெருக்கமாக இணைத்துக் கொள்வதும், மதத்தின் பெயரால் நடக்கும் ஆணாதிக்கத்துக்கு எதிராகப் போராடத் தயங்குவதும் வியப்பான விசயங்கள் அல்ல. அதேபோல இந்த மவுனம் நிரந்தரமானதும் அல்ல.

ஷரியத்தில் நிவாரணம் கிடைக்காது என்பதை உணர்ந்து குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் படி நிவாரணம் கோரி ஆயிரக்கணக்கான விவாகரத்து செய்யப்பட்ட முஸ்லிம் பெண்கள் நீதிமன்றத்தை அணுகிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களுடைய ஒவ்வொரு மனுவும் ஷரியத்தின் ஆணாதிக்கத்திற்கும் அநீதிக்கும் எதிரான பிரகடனங்கள். அந்தப் பெண்களை எந்த இமாம் புகாரியாலும், சகாபுதீனாலும் தடுக்க முடியவில்லை; முடியாது.

மதச்சார்பற்ற சிவில் சட்டத்திற்காகவும், மதச்சார்பின்மைக்காகவும் ஜனநாயக சக்திகள் எவ்வளவு நாணயமாகப் போராடுகிறார்களோ அந்த அளவிற்குத் தான் இசுலாமியப் பெண்களை மதவாதிகளின் பிடியிலிருந்து விடுவிக்க முடியும்.

ஆனால் மதச்சார்பற்ற சிவில் சட்டத்திற்கான போராட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ள விரும்பும் சில முற்போக்காளர்கள் "சாதி ஒழிப்பு, மதச்சார்பின்மை ஆகிய எதையும் தனியே உருவாக்க முடியாது; அது ஒட்டுமொத்த சமூக மாற்றத்துடன் இணைந்தது" என்றும் "இன்றைய சமூக எதார்த்தங்களைக் கணக்கில் கொள்ளாமல் விவாதிக்க முடியாது" என்றும் கூறுகிறார்கள்.

அதெல்லாம் உண்மைதான். பார்ப்பன இந்துமதவெறி, தாக்குதல் நிலையில் உள்ளது என்ற இன்றைய

இந்து மதவெறியை சித்தாந்த ரீதியிலும், அரசியல் ரீதியிலும் எதிர்க்கும் துணிவற்ற சிலர் இன்றைய போலி மதச் சார்பின்மைக் கோட்பாட்டையே அதற்கு மாற்றாக முன் வைக்கின்றனர்; அல்லது ஒட்டு மொத்த சமூக மாற்றம், புரட்சி என்று கூறி நழுவுகின்றனர்.

சமூக எதார்த்தத்தை அங்கீகரிப்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. அதை எப்படி எதிர்கொள்வது என்பதில் தான் வேறுபாடு.

இந்து மதவெறியை சித்தாந்த ரீதியிலும், அரசியல் ரீதியிலும் எதிர்க்கும் துணிவற்ற சிலர் இன்றைய போலி மதச்சார்பின்மைக் கோட்பாட்டையே அதற்கு மாற்றாக முன் வைக்கின்றனர்; அல்லது ஒட்டு மொத்த சமூக மாற்றம், புரட்சி என்று கூறி நழுவுகின்றனர்.

பொருளாதார அடித்தளத்தில், உற்பத்தி உறவுகளில் புரட்சிகரமான மாற்றம் நிகழாமல் மேற்கட்டுமானத்தில் செய்யப்படும் சீர்திருத்தங்கள் நிலைக்காது என்பது உண்மைதான். ஆனால் சாதி ஆதிக்கம், மத ஆதிக்கம், ஆணாதிக்கம், இன, மொழி ஆதிக்கம் ஆகியவை புரட்சியில் தான் ஒழியும் என்று கூறி கைகட்டி நிற்பது புரட்சி குறித்த எந்திரவியல் பார்வையாகும். மாறாக இவற்றுக்கெதிராக புதிய ஜனநாயகக் கோட்பாடுகளை முன்வைத்து நடத்தப்படும் போராட்டங்களினூடாகத்தான் புரட்சி முன் செல்கிறது.

பொருளாதார விடுதலை பெறவில்லையென்றால், பெண்ணினத்திற்கு மணவிலக்கு உரிமையால் பயனில்லை என்பது சரிதான். ஆனால் மணவிலக்கு பெறுகின்ற சட்டரீதியான உரிமையைப் பெறுவதற்கான போராட்டம் பெண்களனைவரும் பொருளாதார விடுதலை அடைவதற்காகக் காத்திருக்க வேண்டியதில்லை.

உழுபவனுக்கே நிலம் என்ற கோரிக்கையை முன் வைக்காமல் பேசப்படும் தீண்டாமை ஒழிப்புச் சவடால் மோசடியானது. உழுபவனுக்கு நிலம் உரிமையாகும்வரை தீண்டாமை ஒழியாது எனக் கைகட்டிக் காத்திருப்பது அபத்தமானது.

அடித்தளம் மேற்கட்டுமானம் ஆகியவற்றக்கிடையிலான இயங்கியல் உறவை மறுத்து, ஒன்றுக்கெதிராக ஒன்றை நிறுத்துவதும், நிலைப்பாடின்றி மவுனம் சாதிப்பதும் நடைமுறையில் தற்போது, நிலவும் மதத்தனிநபர் சட்டங்களை ஆதரிப்பதாகவே முடியும்.

• • •

"ஒரு நாடு - ஒரு மக்கள் - ஒரு சட்டம்" என்ற முழக்கத்தின் கீழ் இந்து தேசியத்தை உருவாக்கும் கருவியாக பொது சிவில் சட்டத்தை பாரதீய ஜனதா பயன்படுத்துகிறது.

பொது சிவில் சட்டத்தைத் திணிக்கக்கூடாது என்று எதிர்க்கும் எதிர்க்கட்சிகளும் இந்திய தேசிய அரசு ஒரே சிவில் சட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை ஆதரிக்கவே செய்கிறார்கள்.

இவ்விரண்டுக்கும் எதிராக நாம் மதச்சார்பற்ற சிவில் சட்டத்தை முன் வைக்கிறோம். இது ஜனநாயகப் புரட்சியின் பிரிக்க முடியாத ஒரு கோரிக்கையாகும். தந்தை வழி ஆணாதிக்கம், சாதி ஆதிக்கம், இன ஒடுக்குமுறை ஆகியவற்றுக்கும், அவற்றைப் புனிதப் படுத்தும் மதச்சட்டங்களுக்கும் எதிரான கோரிக்கையாகும்.

■ முற்றும்.

படிப்பகம்

www.padippakam.com

(23-ஆம் பக்க தொடர்ச்சி)

''நாங்கள் சாதி எல்லாம் பார்ப்ப தில்லை. ஏற்கனவே பல தெருக்களுக் குப் போக வேண்டியிருப்பதால் காந்தி புரத்துக்கு வர நேரம் கிடையாது. வழக் கம்போல நான்காவது நாள் காலை தேர் வரும்'' என்பதுதான் அவர்களின் வாதம்.

''ஒவ்வொருவருக்கும் இவ்வ ளவு நேரம் என்று ஒதுக்கிப் பிரிக்க வேண்டியதுதானே'' என்று மடக்கியவு டன் பதில் சொல்ல முடியாமல் ''வேண் டுமானால் **தனியாக** ஒருநாள் கோயி லையே உங்கள் கையில் கொடுத்து விடுகிறோம் '' என்றனர்.

''**தனியாகக்** கொடுப்பதுதானே உங்கள் நோக்கம்'' என்றவுடன் ''எதற் குத் தொல்லை; திருவிழாவே வேண் டாம்'' என்றார் தி.மு.க. கவுன்சிலர். வசூல் செய்து திருவிழா நடத்துவதில் உள்ள சிரமங்களை சொல்லி அங்க லாய்க்கத் தொடங்கினார் செட்டியார்.

''அவ்வளவு சிரமமாக இருந்தால் நாங்கள் எடுத்து நடத்தி, சாமியை எல்லா தெருவுக்கும் கொண்டு வருகி றோம்'' என்று காந்திபுரம் பிரதிநிதிகள் மடக்கியவுடன் ஆத்திரத்தை அடக்க முடியாமல் நெளிந்தனர்.

பொது நலனுக்காகப் பாடுபடுவ தாகப் பேசும் எண்ணெய் மில் செட்டி யார் கோயிலுக்குச் சொந்தமான (தாழ்த்தப்பட்டவர்களுக்கு உரிய) மந்தை நிலத்தை வளைத்திருப்பதை பிரதிநிதி ஒருவர் கிளப்பினார்.

''பட்டறைக்காரர்கள் என்கிறார் களே இவர்களின் சட்டப்பூர்வ அந் தஸ்து என்ன?'' என்று ஆர்.டி.ஓ.வை மடக்கினார் இன்னொருவர்.

உடனே பேச்சுவார்த்தை வேறு தேதிக்கு மாற்றப்பட்டது.

''கம்ப்யூட்டர் யுகத்தில் சாமி கும் பிடுவதற்குப் போராட்டமா'' - என்று நாத்திகம் பேச ஆரம்பித்தார் ஒரு அதி காரி. ''கம்ப்யூட்டர் யுகத்தில் இந்து அற நிலையத் துறை எதற்கு? தீண்டா மைக்கு தமிழக அரசு ஒத்துப்பாடுகி றதா?'' என்று கேட்டவுடன் ''திருவிழா வுக்கும் எங்களுக்கும் சம்பந்தம் கிடை யாது'' என்று தீயை மிதித்ததுபோல துள்ளினார் இந்து அறநிலையத் துறை அதிகாரி.

''அப்படியானால் திருவிழாவுக் குச் செலவு செய்பவர்கள் தங்கள் விருப்பப்படி நடத்த நீங்கள் அனுமதிப் பீர்களா?'' என்று கேட்டவுடன் மவுன மானார்.

தேர் மறித்து நிறுத்தப்பட்டபோது அப்போதைக்கு நிலைமையைச் சமா ளிக்கவும், போராட்டக் களத்திலிருந்து தப்பிக்கவும், அதிகாரிகள் வாக்குறுதி கொடுத்து விட்டனர். பேச்சுவார்த்தை யிலோ ஆதிக்க சக்திகளின் மனம் நோகாமல் ஏதேனும் தீர்வு காண முடி யுமா என்று வழிதேடுகின்றனர்.

பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட ஒரு பிரதிநிதி போராடும் மக் களின் மனநிலையை வார்த்தைகளில் வெளியிட்டார்:

''எங்காளுக தான் காப்பு கட்ட ணும், வேலை செய்யணும், தப்படிக்க ணும், டான்ஸ் ஆடணும்... ஆனா தேர் மட்டும் எங்க தெருவுக்கு வராது; இத மாத்த முடியாதுன்னா எங்காளுக எந்த வேலைக்கும் இனி வரமாட் டாங்க. நீங்களே தப்படியுங்க, டான்ஸ் ஆடுங்க'' - என்றார்.

சாதியா, சாமியா என்ற கேள்வி வரும்போதெல்லாம் 'உயர்சாதி' ஆதிக்கவாதிகள் சாமியைத்தான் கைக முவியிருக்கிறார்கள்.

தன்மானமா, கடவுள் நம்பிக் கையா என்ற கேள்விக்கு தன்மானம் தான் என்று அழுத்தமாக பதிலளித்தி ருக்கிறார்கள் தாழ்த்தப்பட்ட மக்கள். கையில் தேங்காய், பழம், சூடத்துடன் சாமி கும்பிட வந்த மக்கள்தான் தேரை மறித்தார்கள். ஒரு கை கூட கும்பிடுவ தற்கு உயரவில்லை; ஒரு தேங்காய் கூட உடையவில்லை.

• • •

இந்தப் போராட்டத்தில் யாரு டைய மத உணர்வு புண்படுத்தப்பட்டி ருக்கிறது? கருவறை நுழைவுப் போராட்டம் மக்களின் மத உணர்வைப் புண்படுத்தும் என்று கூறியவர்களும், புரட்சியாளர்களுக்கு இது 'இப்போது' தேவையில்லாத வேலை என்று கூறிய அறிஞர்களும் பதில் சொல்ல வேண் டும்.

இப்போராட்டத்தில் புண்படுத்தப் பட்டதாக ஏதேனும் இருக்குமானால் அது சாதி ஆதிக்க உணர்வேயன்றி மத உணர்வு அல்ல; இந்தச் சாதி ஆதிக்க உணர்வைப் புண்படுத்தும் பணியைப் புனிதப் பணியாகக் கருதித் தொடர்ந்து செய்து வருகிறோம்; செய்வோம்.

போராட்டத்தின்போது காந்திபு ரத்தில் கட்டப்பட்டிருந்த ஒலிபெருக்கி அந்தப் பகுதியிலே உள்ள ஒரு சிறிய கோயிலுக்குள்ளிருந்துதான் இயக்கப் பட்டது. எனவே மறியலின்போது அறி விப்பு செய்த ம.க.இ.க. தோழரும் கோயிலுக்குள்ளிருந்துதான் மைக்கில் பேசினார்.

''கம்யூனிஸ்டுகாரனுக்கு கோயி லுக்குள் என்னய்யா வேலை?'' என்று எரிச்சலாகக் கத்தினார் ஒரு போலீசு அதிகாரி.

அதே கேள்வி. கருவறை நுழை வுப் போராட்டத்தின்போது ராம. கோபாலன் எழுப்பிய அதே கேள்வி.

''எங்கே சாதிப் பிரச்சினை இருக் குதோ அங்கே ம.க.இ.க.-காரன் வரத் தான்யா செய்வான்'' என்று கூட்டத்தி லிருந்து ஒரு குரல் பதிலளித்தது. போலிசு அதிகாரியிடமிருந்து மறு பேச் சில்லை. அவருக்குக்கூட புரிந்துவிட் டது போலும்! ■

## மீண்டும் திருவரங்கம்

1992, மே - கருவறை நுழைவுப் போராட்டத்தினால் இன்றுவரை திரு வரங்கத்தில் கூட்டம் நடத்த அனுமதி இல்லை. கருவறையில் நுழைந்து அரங்கநாதனை தொட்டு எழுப்பிய எமது தோழர்கள்மீது தொடுக்கப்பட்ட 'கொலைமுயற்சி' வழக்கும் முடிய வில்லை. நீதிமன்ற உத்தரவினால் 14.4.97 அன்று திருவரங்கத்தில் மழை யின் காரணமாக இடையூறு இருப்பினும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சிறப் புரையாற்றிய தோழர். காளியப்பன் கொலை முயற்சி வழக்கைத் தி.மு.க. அரசு தள்ளுபடி செய்ய வேண்டும் என் றும், மீண்டும் அனைத்து சாதியினரை அர்ச்சகராக்குவதற்கு அரசியல் சட்டத் தைத் திருத்த வேண்டும் என்றும் பேசி னார். கலைக் குழுவின் கலை நிகழ்ச்சி அகர கானமாய் முழங்கியது. அரங்க நாதன் காதில் மட்டுமல்ல பார்ப்பனியத் தின் செவியிலும் இடியாய் இறங்கியது.

## பூணூலிஸ்டு சி.பி.எம்.

பிப்.'97 செம்மலரில், எழுத்தாளர் கு. சின்னப்பாரதி தனது ஆந்திரத்து அனுப வங்களை விவாதிக்கும்போது சி.பி.எம். எப்படி மக்களைத் திரட்டு கிறது என்பதற்கு உதாரணமாக ஒரு செய்தியை வெளியிட்டுள்ளார். திருப் பதி தேவஸ்தான ஊழியர்களை சி.ஐ.டி.யு. அணிதிரட்டி போராடும் போது, ''பிராமண அர்ச்சகர்கள் அட் டைகளையும், செங்கொடியையும் ஏந் தியபடி, நெற்றியில் நாமமும் மார்பில் பூணூலுமாக ஊர்வலம் சென்றார்களாம். இவர்கள் தமிழ்ப் பார்ப்பனர்கள் என்ப தால் அணிதிரட்டும் வேலைக்கு உதவ சி.பி.எம்.மின் தமிழ்க் குழு கே. வரத ராசனை அனுப்பி வைத்ததாம். இத னால் தமிழ்நாட்டு பிராமணர் சங்கத்தில் குழப்பம், சி.பி.எம்முக்கா, பி.ஜே. பி.க்கா யாருக்கு ஓட்டு என்று! மொத்தத் தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் செய்தியை வெளியிட்ட சி.பி.ஐ. (எம்.பூணூலிஸ்டு) செம்மலருக்கு நன்றி.

படிப்பகம்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3 செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.

www.padippakam.com

PUTHIYA KALACHARAM R.N. 42647/87 REGD. NO. TN/MS(N) / 942

# எம் கலைஞனின் காற்சதங்கை உன் அரசை வீழ்த்தும்

"கத்தார் சுடப்பட்டார்!" ஏப்ரல் 6 அன்று மாலை 6.10 மணிக்கு ஆந்திரப் புரட்சிப் பாடகர் கத்தார் சுடப்பட்டார். இந்தியா எங்கும் அதிர்ச்சி அலைகள்.

முதலில் வந்த செய்தி: நிலப் பிரச்சனை சம்பந்தமாகப் பேச வேண்டுமென்று கூறி செகந்திராபாத்தில் உள்ள கத்தார் வீட்டுக்கு நான்கு அடையாளம் தெரியாத நபர்கள் வந்தனர்; பேசிக் கொண்டிருந்தபோதே திடீரென்று சுட்டுவிட்டு வெளியேறி வெள்ளை அம்பாசிடர் காரில் தப்பிச் சென்றுவிட்டனர்.

ஆனால் ஆந்திரத்தில் எல்லோராலும் குற்றம் சாட்டப்பட்டது போலீஸ் தான். நான்கு குண்டுகளைப் பாய்ச்சி போலீஸ் கத்தார் உயிரைக் குடிக்க முயற்சி செய்திருக்கிறது. ஆந்திரத்தில் வளர்ந்துவரும் புரட்சி இயக்கத்தைத் தடுப்பதற்காகத் தெலுங்கு தேசம் அரசாங்கம் மத்திய அரசின் உதவியோடு ஏராளமான நவீன கொலைக்கருவிகள் கொண்ட துணை ராணுவப் படையைக் கொண்டு கொலையாட்டம் போட்டு வருகிறது. "வேட்டை நாய்கள்" (GREY HOUNDS) என்ற சிறப்புப் போலீஸ் படை ஐ.ஜி. அரவிந்த ராவ் தலைமையில் 'மோதலு'க்காகவே இயங்கி வருகிறது. அண்மையில் ஐதராபாத்தைச் சுற்றிலும் 23 போராளிகளைக் கொன்றுள்ளது 'வேட்டை நாய்'.



சுடப்பட்ட கத்தார்

ஆந்திரத்தில் மக்கள் யுத்தக் குழுவின் ஆயுதம் தாங்கிய குழுக்கள் இயங்கத் தொடங்கியதிலிருந்தே அரசு எதிர்த் தாக்குதலைத் தொடங்கிவிட்டது. புரட்சியாளர்கள், அவர்களுக்கு உதவிசெய்த மற்றும் அப்பாவி கூலி விவசாயிகள் நூற்றுக்கணக்கில் கொல்லப்பட்டார்கள். எல்லாவற்றுக்குமே அரசு சூட்டிய பெயர்: 'மோதலில் சாவு'. அது கபட நாடகம். புரட்சிக்கு ஆதரவான கலைஞர்கள், சிவில் உரிமைக் கழக உறுப்பினர்கள், தலைவர்களைக் கூட மிரட்டுவது, சட்டவிரோதமாகக் காவலில் வைப்பது, சித்திரவதை செய்வது போன்றவை போலீசின் அன்றாடச் செயல்கள்.

கத்தார் மீது நடத்தப்பட்ட கொலை முயற்சிகூட இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் நடந்திருக்கிறது. அண்மையில் அரசின் போலி மோதல் நாடகங்களை எதிர்த்து 'போலி மோதல்களில் இறந்தவர்களின் சடலங்களைப் பெறுவதற்கான குழு' ஒன்று கத்தார் தலைமையில் அமைக்கப்பட்டது. அதன் புயல்வேகமான செயல்பாடுகளால் ஒரு உயர்நீதிமன்ற வழக்கில் கத்தார் வெற்றி பெற்றார்; நலகொண்டா என்ற இடத்தில் மார்ச் 22 அன்று ஒரு தோழரின் சடலத்தைப் பெறுவதற்காக கத்தார் நேரடி முயற்சியும் எடுத்தார். அதற்காக போலீசு கத்தாரைக் கைது செய்தது.

கத்தார் சுடப்படுவதற்கு இருநாள் முன்பாக 'நக்சல்பாரியின் வன்முறையில் பாதிப்புக்குள்ளான குடும்பங்கள்' என்று சொல்லி இரு பேருந்து நிறைய ஆட்களைக் கொண்டுவந்து கத்தார் வீட்டின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தி நாடகமாடியது போலீசு. கத்தார் மற்றும் அவரது மனைவி, இரு குழந்தைகளின் சாட்சியத்தின்படி கத்தாரைச் சுட்டவர்கள் ஏற்கனவே அக்கும்பலில் வந்தவர்கள்தான்.

கத்தார் தலைமையில் உள்ள நடவடிக்கைக் குழு கோருவது இவைதான்: "போலி மோதல்களில் ஈடுபட்ட போலீசார் மீது கொலை வழக்கு பதிவு செய்ய வேண்டும்; கொலை செய்யப்பட்டவர்களின் சடலங்களை மறுபரிசோதனை (போஸ்ட் மார்ட்டம்) செய்ய வேண்டும்". இக்கோரிக்கைகள் செயல்படுத்தப்பட்டால் போலீசு முழுதும் அம்பலமாகிவிடும். இதைத் தடுத்து நிறுத்த போலீசு செய்த காட்டுமிராண்டித் தாக்குதலே துப்பாக்கிச் சூடு.

இப்போது மக்கள் ஒரே குரலாக குற்றவாளிகள் போலீசுதான் என்று சொல்லிவிட்டார்கள். இதை மூடி மறைக்க உடனே ஐ.ஜி. அரவிந்த ராவ் "எங்களுக்கு கத்தார் எதிரி அல்ல" என்று அறிக்கை விட்டார்; அதற்கும் ஒரு படி மேலே போய் அரசின் சாதீய நரித்தனங்களோடு "மக்கள் யுத்தக் குழுவில் என்றுமே பிற்படுத்தப்பட்ட நலிந்த பிரிவினருக்குரிய தகுதிகள் வழங்கப்பட்டதில்லை" என்று அறிக்கைவிட்டு பிரச்சனையையே திசை திருப்பிவிட முயற்சிக்கிறார்.

இனியும் மக்கள் அரசின் பொய்களை, அவதூறுகளை, போலீசின் எச்சில் செய்திகளை ஒலிபரப்பும் செய்தி ஏடுகளை நம்பப்போவதில்லை.

ஆனால் போலீஸ் அரசு தனது அடக்குமுறைகளை (கொலைகளை) யாருமே தட்டிக் கேட்க முடியாதபடியானளாவிய அதிகாரங்களைக் கோரிக் கொண்டே இருக்கிறது; அவ்வாறிருந்தால்தான் தனது செங்கோலைச் சரியாகச் செலுத்த முடியும் என்று அடிக்கடி புலம்பிக் கொண்டும் இருக்கிறது. இன்னொருபுறம் சட்டவிரோதமாகவே அந்தக் கோரிக்கைகளை செயல்படுத்திக் கொண்டும் இருக்கிறது. எவ்வளவுக்கெவ்வளவு மக்களைத் தழுவிய அரசியல் இயக்கங்களின் வழியாக புரட்சி நடைமுறை இயங்குகிறதோ அந்த அளவு போலீஸ் அடக்குமுறை அம்பலப்படும். கத்தார் நடவடிக்கைக் குழுவின் வேலைகள் இதற்கொரு சாட்சி.

'கத்தார்' என்றால் புரட்சி என்று பொருள். புரட்சியை எவராலும் சுட்டுக்கொல்ல முடியாது! ■